# கிராம அளவிலான
# குழந்தை பாதுகாப்பு குழு

## பயிற்சி கையேடு



unicef
for every child

INDIAN COUNCIL FOR CHILD WELFARE
TAMIL NADU

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | கிராம அளவிலான குழந்தை பாதகாப்பு குழு<br>- பயிற்சி கையேடு |
| முதல் பதிப்பு | : | நவம்பர் 2017 |
| வெளியீடு | : | |
| உருவாக்கம் | : | இந்திய குழந்தைகள் நலச் சங்கம், தமிழ்நாடு<br><br>திருமதி. கிரிஜா குமார்பாபு,<br>கௌரவ பொது செயலாளர்,<br>இ.கு.ந. சங்கம், தமிழ் நாடு<br><br>திருமதி. அ. சரஸ்வதி,<br>முதல்வர் - பயிற்சி மையம்,<br>இ.கு.ந. சங்கம், தமிழ் நாடு |
| வடிவமைப்பு | : | பி.எஸ்.எஸ். ராவ் |
| அச்சகம் | : | சாய் பிரின்ட் ஹவுஸ் |

# பொருளடக்கம்


பக்கம்

அத்தியாயம் - 1 : 13
குழந்தை உரிமைகள் மீதான ஐ.நா. உடன்படிக்கை

அத்தியாயம் - 2 : 27
குழந்தைகளின் பாதுகாப்பற்ற சூழல்

அத்தியாயம் - 3 : 41
குழந்தை பாதுகாப்பிற்காக இயற்றப்பட்டுள்ள சட்டங்கள்

அத்தியாயம் - 4 : 55
குழந்தையின் நலனைப் பேணிக் காப்பதற்கான சமுதாய
பாதுகாப்பு அமைப்புகள் & சமூக பிரதிநிதிகளின் கடமைகள்

அத்தியாயம் - 5 : 73
கிராம அளவிலான குழந்தை பாதுகாப்பு குழுவின் பணிகள்
மற்றும் பொறுப்புக்கள்

அத்தியாயம் - 6 : 81
பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சமூக நலத் திட்டங்கள்

அத்தியாயம் - 7 : 85
பயிற்றுநர் கவனத்திற்கு

# முகவுரை

குழந்தைகள் எவ்வாறு வளர்க்கப்படுகிறார்கள், உருவாக்கப் படுகிறார்கள் என்பதைப் பொறுத்தே அந்நாட்டின் எதிர்காலம் அமைகிறது. ஒரு குழந்தையின் ஆரோக்கியம், உடல் நலம், கல்வி, விளையாட்டு, மனித நேய மாண்புகள், குழந்தைக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு போன்றவையே ஒரு நாட்டின் வளத்திற்கு அடிக்கல்லாகும். இவற்றுள் முக்கியமானது குழந்தை பாதுகாப்பாகும். இளவயதில் தீமைகளுக்கும், தகாத செயல்களுக்கும் உட்படுத்தப்பட்ட குழந்தைகளின் மனநலம் முழுமை பெறுவதில்லை என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். பெரியவர்கள் ஆனபோதும் அவைகளின் தாக்கத்திலிருந்து அவர்களால் வெளி வர முடிவதில்லை. எனவே, ஒரு நாட்டின் மனித வளத்தை மேம்படுத்துவதற்கான முயற்சியில் குழந்தைகள் பாதுகாப்பு முதன்மை பெறுகிறது.

குழந்தை பாதுகாப்பு என்பது சட்டங்களால் மட்டுமோ, அரசால் மட்டுமோ உறுதி செய்ய முடியாது. குழந்தைகளைப் பாதுகாப்பது அனைவரின் கடமையாகத்தான் கருதப்படவேண்டும். இதன் அடிப்படையிலேயே, ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டத்தின்படி, ஒவ்வொரு கிராமத்திலும் குழந்தை பாதுகாப்பு குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். தமிழ் நாட்டில் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் குழந்தை பாதுகாப்பு குழு தற்போது உருவாகி வருகின்றன. அவர்களது பயிற்சிக்கும், குழந்தை பாதுகாப்பு குறித்து அவர்களது புரிதலை ஆழப்படுத்தும் விதமாகவும் இக்கையேடு அமைந்துள்ளது. இக்கையேட்டில், கூறப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும், அவர்களால், அவர்களது அனுபவங்களோடு பொருத்திப் பார்த்து, புரிந்து கொள்ள இயலும். எளிமையான தமிழில், படங்களுடன் எளிதில் புரிந்துகொள்ளும்படி இக்கையேடு அமைக்கப்பட்டுள்ளது. அரசால் மேற்கொள்ளப்படவிருக்கும் பயிற்சிகளுக்கு இக்கையேடு உதவியாக இருக்கும் என்று நம்புகிறோம்.

இக்கையேட்டினைத் தயாரிக்கும் பொறுப்பை எங்களுக்கு அளித்த யுனிசெ∴ப் நிறுவனத்திற்கும், தமிழக அரசின் சமூக பாதுகாப்புத் துறைக்கும் எங்களது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இக்கையேட்டினை வடிவமைக்க உதவிய எங்களது ஆலோசனை குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இக்கையேட்டினை கற்பனையோடுகூடிய எளிமையாக வடிவமைத்துக் கொடுத்துள்ள திரு. ஸ்ரீனிவாஸ ராவ், ஸ்பெக்டரம் கிரா∴பிக்ஸ் நிறுவனத்திற்கும், எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கிரிஜா குமார்பாபு,
கௌரவ பொது செயலாளர்
இந்திய குழந்தைகள் நலச் சங்கம், தமிழ் நாடு

# வாழ்த்துரை

குழந்தைகளுக்குப் பாதுகாப்பாக வாழத் தகுந்த ஒரு சமூகத்தை உருவாக்குவது நம் அனைவரின் கடமையாகும். குழந்தைகளின் மகிழ்ச்சியான இந்நாளுக்கும் வளமான எதிர்காலத்துக்கும் சாதகமான சூழலை உருவாக்குவதில் அடிப்படை சமூகங்களின் பொறுப்பும் கடமையும் இன்றியமையாத ஒன்று.

கிராமங்கள் தோறும் உருவாக்கப்படும் கிராம அளவிலான குழந்தை பாதுகாப்பு குழுக்கள் குழந்தைகளின் சூழலில், வாழ்வில் ஏற்படுத்த போகும் மாற்றங்களை குறித்த நம்பிக்கையை விதைக்கிறது. மாற்றங்கள் களத்தில் இருந்தே தொடங்க வேண்டும். அவ்வாறு உருவாகும் மாற்றங்களே நீடித்த நிலைத்த வளர்ச்சியையும் குழந்தைகள் வாழ்வில் மகிழ்ச்சியையும் நிலைக்கச் செய்யும்.

மிகப்பெரிய சமூக புரட்சிகள் எளிய செயல்பாடுகளின் மூலமே தொடங்குகின்றன. கிராம அளவிலான குழந்தை பாதுகாப்பு குழுக்களுக்கான இந்த பயிற்சி கையேடு பாரதியின் அக்கினி குஞ்சாக அமைந்து குழந்தைகள் உரிமைகள் உறுதி செய்யப்படவும், குழந்தைகள் பாதுகாப்பு நினைவாகிடவும், சமூக மாற்றத்தில் குழந்தைகளும் பங்கேற்கும் நிலை உருவாகிடவும் கரம் கொடுக்கும் என நான் உளமார நம்புகிறேன். இந்த முயற்சியில் யுனிசெஃப் தோள் கொடுப்பதில் உள்ளபடிய மகிழ்கிறேன்.

பரவட்டும் ஒளி... குழந்தைகள் வாழ்வில்... கிராம அளவிலான குழந்தை பாதுகாப்பு குழுக்கள் வழியே.

வாழ்த்துக்கள்

ஜோப் ஜக்காரியா,
தலைவர்,
யுனிசெஃப்
தமிழ் நாடு & கேரளா

# அணிந்துரை

ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டம் இந்திய அரசாங்கத்தால் 2009ம் ஆண்டு அமுல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் குழந்தை பாதுகாப்பை உறுதி செய்வது மற்றும் அவர்களின் வளர்ச்சிற்கும், மேம்பாட்டிற்கும் ஏற்ற பாதுகாப்பான சூழலை உருவாக்குவது ஆகும். இந்த திட்டத்தின் கீழ் கண்காணிக்கும் முறை கிராமம் முதல் மாநில அளவு வரை பரவலாக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு இந்த திட்டத்தினை 2012ம் ஆண்டு தொடங்கி மேலும் மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு கிராம பஞ்சாயத்திலும் கிராம அளவிலான குழந்தை பாதுகாப்பு குழுவினை 2013ம் ஆண்டு உருவாக்கியது.

கிராம அளவிலான குழந்தை பாதுகாப்பு குழுவானது, குழந்தை பாதுகாப்பை உறுதி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை அமைப்பாகும். இக்குழுவானது குழந்தைகள் தொடர்பான பிரச்சனைகளை எதிர்கொள்வது மட்டுமல்லாது அத்தகைய நிகழ்ச்சிகள் நிகழா வண்ணம் தனிப்பட்ட பொறுப்பெடுத்து செயல்படும் முன்னணி அமைப்பு ஆகும். இந்த அடிப்படை அமைப்பானது வலுப்பெற்றிருக்குமேயானால் பாதிப்புக்குள்ளாகக்கூடிய சூழலில் உள்ள குழந்தைகளை அடையாளம் காண்பதுடன் அவர்களின் பிரச்சனையைத் தீர்ப்பது சிறந்த முறையில் நடைப்பெறும்.

குற்றம் புரிந்ததாகக் கருதப்படும் குழந்தை இளைஞர் நீதி குழுமத்தினால் விடுவிக்கும்போது கிராம பஞ்சாயத்தில் வலுப்பெற்றுள்ள கிராம அளவிலான குழந்தை பாதுகாப்பு குழு மற்றும் உள்ளுர் மக்கள் அக்குழந்தையை கண்காணிப்பது குழந்தையின் நடவடிக்கையை உறுதி செய்வதுடன் சரியான மறுவாழ்விற்கு உதவி புரியம் வண்ணம் செய்யலாம். இளைஞர் நீதி சட்டத்தினை இடையூறின்றி திறம்பட செயல்படுத்துவதற்கு கிராம அளவிலான குழு பெறும் பங்கு வகிக்க இயலும்.

இந்திய குழந்தைகள் நலச் சங்கம், தமிழ் நாடு மற்றும் யுனிசெ.ஃப் நிறுவனம் குழந்தைகளின் நலனிற்கான பல திட்டங்களை தொடர்ந்து செய்து வருகின்றனர். குழந்தைகளின் மறுவாழ்வு மற்றும் பாதுகாப்பிற்காக மாநில மற்றும் தேசிய அளவில் பணி புரிந்து வருகின்றனர். இந்திய குழந்தைகள் நலச் சங்கம், தமிழ்நாடு மற்றும் யுனிசெ.ஃப் நிறுவனம் இணைந்து இந்த பயிற்சி கையேட்டினைத் தயாரித்துள்ளனர் என்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். குழந்தைகளின் நலனிற்கான கிராம அளவிலான குழுக்கள் வலிமைப் பெறுவதற்கு இந்த பயிற்சி கையேடு பயன்படும் என நான் நம்புகிறேன்.

திரு. ஆர். லால்வேனா, இ.ஆ.ப.,
ஆணையர் / செயலர்,
சமூக பாதுகாப்பு துறை
தமிழ் நாடு

# அறிமுகம்

ஒரு தேசத்தின் நலன், அத்தேசத்தினுடைய குழந்தைகளின் நலனைப் பொறுத்து இருக்கிறது. ஒவ்வொரு குடும்பத்தின், கிராமத்தின் சமூகத்தின் நலனும் குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் அவர்களுடைய நலனோடு நெருங்கிய தொடர்புடையதாய் இருக்கிறது. எனவே குழந்தைகள் பாதுகாக்கப்படுவதற்கான உரிமைக்கு எதிராக உள்ள மீறுதல்களின் தன்மைகள் குறித்தும் அவற்றின் சூழ்நிலைக் குறித்தும் அதன் விளைவுகள் குறித்தும் நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகிறது. இவற்றை புரிந்துக்கொண்டால் தான் குழந்தைகளை எப்படி, ஏன் பாதுகாக்க வேண்டும் என்பது குறித்து நாம் தெளிவடைய முடியும்.

பல கிராமங்கள், மாவட்டங்கள், மாநிலங்கள் சேர்ந்தால் தான் தேசம் என்று அழைக்கிறோம். எனவே கிராம அளவில் குழந்தைகளின் நலனை பேணிக் காப்பதற்கு அக்கிராமத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் பொறுப்பு உள்ளது என்பதை கருத்தில் கொண்டு ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டத்தில், கிராம அளவிலான பாதுகாப்பு குழு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. கிராம அளவில் குழந்தைகளின் பாதுகாப்பிற்கான குழு ஒன்றை அமைக்க அரசாங்கத்தால் ஒரு அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது (G.O. (Ms) No.10, dated 10.01.2013).

இதன் அடிப்படையிலேயே இந்த கையேட்டில் குழந்தைகளின் உரிமைகளுக்கான உடன்படிக்கை, அடிப்படை உரிமைகள், குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள், பாதிப்புக்குள்ளான குழந்தைகளின் நிலை, குழந்தைகளின் பாதுகாப்பிற்காக இயற்றப்பட்ட சட்டங்கள், அமைப்புகள் மற்றும் நலத் திட்டங்கள், கூட்ட அறிக்கையை சமர்ப்பிக்கும் முறை ஆகியவை பற்றி கூறப்பட்டுள்ளது. தங்கள் கிராமத்தில் குழந்தைகளின் நிலை என்னவென்று இந்த கையேட்டின் மூலம் அறிந்துக்கொள்ளலாம். ஒவ்வொரு முறையும் கூட்டம் நடைப்பெறும்பொழுதெல்லாம் இந்த கையேட்டினை பயன்படுத்தி தங்கள் கிராமத்தில் குழந்தைகளின் நிலையை அறிந்துக்கொண்டு அதற்கேற்ப நடவடிக்கையை மேற்கொள்வது ஒவ்வொருவரின் கடமை மற்றும் பொறுப்பும் ஆகும்.

# அத்தியாயம்



# 1

# குழந்தை உரிமைகள் மீதான ஐ.நா. உடன்படிக்கை

அடிப்படை மனித உரிமைகளைப் பேணிக்காப்பது ஒரு சமுதாயத்தின் முதல் கடமை என்பது அகில உலக அளவில் ஒத்துக்கொள்ளப்பட்டுள்ள ஒரு கொள்கையாகும். ஆனால் அத்தகைய மனித உரிமைகள் தங்களுக்கும் உண்டு என்பதை உணராத, அது மறுக்கப்பட்டபோது எதிர்த்துப் போராடும் சக்தியற்றவர்கள் ஒரு நாட்டின் குழந்தைகளே. ஆகையால் அத்தகைய குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பும், கடமையும், பெற்றோர், அரசாங்கம், சமுதாயம் ஆகிய அனைவருக்கும், இன்னும் சொல்லப்போனால் மனித இனத்திற்கே உரியதாகும்.

இதில் இரண்டு முக்கியமான கருத்து, ஒன்று குழந்தை மற்றொன்று உரிமை ஆகும். “குழந்தை” என்பவர் 18 வயதிற்குட்பட்ட அனைவரும் குழந்தைகள் ஆவர். “உரிமை” என்பது அடிப்படை தேவைகளைக் கேட்டுப்பெறுவதற்கான உத்திரவாதம் ஆகும். ஒரு மனிதனுக்கு அடிப்படைத் தேவைகள் சட்டப்பூர்வமாக கிடைப்பதற்கு வழிவகை செய்வது அரசாங்கத்தின் கடமை ஆகும்.

உலகில் ஒவ்வொரு குழந்தையின் உரிமையையும் நிலைநாட்டும் வண்ணம் குழந்தை உரிமைகளுக்கான ஓர் உடன்படிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்குழுவால் நவம்பர் மாதம் 1989ம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ்வுடன்படிக்கை 54 ஷரத்துக்களைக் (விதிகள்) கொண்டது. இந்த உடன்படிக்கை நான்கு அடிப்படை உரிமைகளாக குழந்தைகளின் வாழும் உரிமை, பாதுகாப்பு உரிமை, வளர்ச்சிக்கான உரிமை, பங்கேற்கும் உரிமை என வரையறைப்படுத்தி உள்ளது. இது எல்லா நாடுகளையும் இணைக்கும் ஓர் சர்வதேச கொள்கையாகும்.

பிறந்த உடன், தனக்கென்று ஒரு பெயர், ஒரு நாட்டின் குடியுரிமை ஆகிய அனைத்தையும் பெறுவதற்கு ஒரு குழந்தைக்கு உரிமை உண்டு. அது நல்ல முறையில் வளர்வதற்கு ஆவன செய்வது பெற்றோரின் தலையாய கடமை ஆகும். பெற்றோர் தங்கள் கடமையைச் சரிவரச் செய்ய உறுதுணையாக இருப்பது அந்நாட்டு அரசின் கடமையாகும். ஆரோக்கியமான சூழலில் வாழ, கல்வி கற்க, வன்முறை, சுரண்டல் ஆகியவற்றில் இருந்து பாதுகாக்கப்பட, பேச்சுரிமை, பங்கேற்பு உரிமை, மதம், கலாச்சாரம், ஆகியவற்றில் சுதந்திரம் ஆகிய அரிய பல கருத்துக்கள் இவ்வுடன்படிக்கையில் கூறப்பட்டுள்ளது.

உடன்படிக்கையில் கையெழுத்திட்ட அனைத்து உறுப்பு நாடுகளும் தங்கள் நாட்டில் உள்ள குழந்தைகளுக்கு மேற்கூறிய உரிமைகள் முழுமையாக கிடைப்பதற்கு தாங்கள் எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து அவ்வப்போது ஐ.நா. சபைக்கு அறிக்கை அனுப்ப வேண்டும்.

ஐ.நா. சபையால் நியமிக்கப்பட்ட ‘கண்காணிப்புக் குழு’ இந்த அறிக்கையைப் பரிசீலிக்கும், அத்துடன் அதன் அங்கத்தினர் தனிப்பட்ட ஆய்வு செய்யவும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் கருத்துக்களை அறியவும், இது குறித்து தங்கள் ஆய்வறிக்கையை ஐ.நா. சபைக்குச் சமர்ப்பிக்கவும் கண்காணிப்புக் குழுவிற்கு உரிமையுண்டு.

நம் இந்திய அரசாங்கம் 1992ம் ஆண்டு இந்த உடன்படிக்கையில் கையொப்பமிட்டு, நம் நாட்டுக் குழந்தைகளுக்கு மேற்சொன்ன உரிமைகளை வழங்கும் தார்மீகப் பொறுப்பை ஏற்றுள்ளது.

ஐ.நா. உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டு கையெழுத்திட்ட நாடுகள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை குழந்தை உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து அறிக்கை வெளியிடவேண்டும். இந்த அறிக்கையின் அடிப்படையில் ஐ. நா. குழு உறுப்பு நாடுகளின் குழந்தைகள் நலன் மற்றும் செயல்பாட்டை கண்காணித்து ஐ.நா. பொது சபைக்கு தகவல் அளிக்கும்.




குழந்தைகள் உரிமைப் பற்றிய அறிக்கையை நம் இந்திய நாடு அரசாங்கத்தின் அறிக்கையாக நான்கு முறையும், தன்னார்வு தொண்டு நிறுவனங்களின் சார்பாக மூன்று முறையும் அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. தமிழ் நாட்டின் அறிக்கையை இந்திய குழந்தைகள் நலச் சங்கம் தொடர்ந்து மூன்று முறை தேசீய அமைப்பிற்கு அனுப்பியுள்ளது.

இத்தகைய சூழலில், நம் அரசியல் சாசனமும், சட்டங்களும் குழந்தைகளின் உரிமைகளைப்பற்றி என்ன சொல்கின்றன என்பதைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்வது அவசியமாகிறது.

### உட ன்படிக்கையின் 25ம் ஆண்டு நிறைவு விழா

குழந்தை உரிமைகள் மீதான ஐ.நா. உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு 25ம் ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டது.. குழந்தைகளின் உரிமைகளுக்காக சர்வதேச அளவில் முதன் முதலில் கொண்டுவரப்பட்ட வரலாற்று சிறப்பு வாய்ந்த உடன்படிக்கையாக இந்த உடன்படிக்கைத் திகழ்கின்றது.




ஒரு சமூகம் அதன் குழந்தைகளை எப்படி வழி நடத்துகிறார்கள் என்பதை விட சிறப்பாக வேறு எந்த விதத்திலும் அச்சமூகத்தின் ஆன்மாவைப் பிரதிபலிக்க முடியாது”

\- நெல்சன் மண்டேலாவின் மேற்கோள்



“There can be no keener revelation of a society’s soul than the way in which it treats its children.”

\- Nelson Mandela

# குழந்தை உரிமைகள் மீதான
# ஐ.நா. உடன்படிக்கையின் ஷரத்துக்கள் (விதிகள்)

| | ஷரத்துக்கள் |
|---|---|
| 1 | 18 வயது வரம்புக்குட்பட்ட அனைத்து மனிதர்களுக்கும் இந்த உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள அனைத்து உரிமைகளும் உண்டு. |
| 2 | எந்த ஒரு குழந்தையும், இனம், நிறம், அரசியல், தேசியம், பிராந்தியம், சமூகம், கருத்து, சொத்து, உடற்குறைகள் போன்ற எந்த ஒரு காரணத்திற்காகவும் பாகுபடுத்தாமல் அனைத்து குழந்தைகளுக்கும் இவ்வுடன்படிக்கை பொருந்தும். |
| 3 | நீதிமன்றங்கள், தனியார் நடத்தும் சமூக நல அமைப்புகள், நிர்வாக அதிகாரிகள் முதலியன எல்லா பிரிவினரும், குழந்தைகளுக்கு நன்மை தரக்கூடிய நடவடிக்கையையே மேற்கொள்ள வேண்டும். |
| 4 | குழந்தைகளின் உரிமைகளை நடைமுறைபடுத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.. |
| 5 | குழந்தைகளின் திறமைகளை வளர்க்கிற விதத்திலே வழிகாட்டும் பொறுப்பு பெற்றோர் / பாதுகாப்பாளர்களுக்கு உண்டு என்பதை அரசு அங்கீகரிக்க வேண்டும். |
| 6. | ஒவ்வொரு குழந்தைக்கும் உயிர் வாழும் உரிமை உண்டு. குழந்தையின் வாழ்வு மற்றும் வளர்ச்சியை அரசு உத்திரவாதப்படுத்த வேண்டும். |
| 7& 8 | தனக்கென்று ஒரு பெயர், தேசிய இனம், பெற்றோர்கள் பற்றிய தகவல்கள், அவர்களால் பராமரிக்கப்படுவது போன்றவற்றிற்கு, ஒவ்வொரு குழந்தைக்கும் உரிமை உண்டு. |
| 9 | குழந்தையின் நலனுக்கு விரோதமாக இருந்தால் தவிர, தன் பெற்றோருடன் வசிக்க, குழந்தைக்கு உரிமை உண்டு. ஒருவேளை, பெற்றோர்களிடமிருந்து பிரிந்திருந்தால், அவர்களுடன் தொடர்பு வைக்க உரிமை உண்டு. |
| 10. | குழந்தையோ, அதன் பெற்றோரோ, எந்த நாட்டில் இருந்தாலும், அதை விட்டு, சொந்த நாடு திரும்பி, ஒன்று சேர உரிமை உண்டு. பெற்றோர், குழந்தை உறவை நிலைநாட்டிக் கொள்ள உரிமை உண்டு. |
| 11. | குழந்தைகளைச் சட்டத்திற்கு புறம்பாக தத்து கொடுப்பதைத் தடுப்பதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும். |
| 12. | தம்மை பாதிக்கும் விஷயங்களில் குழந்தைகள் தங்கள் கருத்தை சுதந்திரமாக எடுத்துக் கூறவும், அவை மதிக்கப்படவும் உரிமை உண்டு. |
| 13. | குழந்தைகள் தங்கள் கருத்துக்களைக் கூறவும், தகவல்கள் பெறவும் உரிமை உண்டு. |
| 14. | குழந்தைகளுக்குத் தங்களுடைய கருத்துக்களை உருவாக்கவும், நம்பவும், கடைப்பிடிக்கவும் உரிமை உள்ளது. பிறருடைய உரிமைகளில் தடையில்லாவண்ணம் தங்களுடைய மதசார்பான கருத்துக்களைக் கடைப்பிடிக்கவும், மத ஒழுக்கங்களைப் பின்பற்றவும் உரிமை உண்டு. |



| | |
|---|---|
| 15. | பிறர் உரிமைக்குக் களங்கம் ஏற்படாமல், மற்றவர்களைச் சந்திக்கவும், குழுவாவுதலுக்கும் குழந்தைக்கு உரிமை உண்டு. |
| 16. | குழந்தைகளின் அந்தரங்கம் பாதுகாக்கப்பட உரிமை உண்டு. |
| 17. | ஊடகங்கள் வாயிலாக பயனுள்ள, நம்பகமான தகவல்களைப் பெற குழந்தைக்கு உரிமை உண்டு. |
| 18. | குழந்தைகளின் திறமைகளை வளர்க்கிற விதத்திலே வழிகாட்டும் பொறுப்பு பெற்றோர்களுக்கு உண்டு என்பதை அரசு அங்கீகரிக்க வேண்டும்.<br>குழந்தை வளர்ப்பில், பெற்றோருக்கு, கூட்டுப் பொறுப்பு உண்டு. இதில், அரசு ஆதரவு தரவேண்டும். |
| 19. | புறக்கணிப்பு, வன்முறை போன்றவற்றிலிருந்து குழந்தை பாதுகாக்கப்பட வேண்டும். இவற்றைத் தடுக்கவும், தண்டிக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கவும், அரசு திட்டங்களை உருவாக்க வேண்டும். |
| 20. | குடும்பம் இல்லாத குழந்தைகளுக்கு விசேஷ கவனிப்பு தேவை. அவர்களின் கலாச்சார பின்னணிக்கு ஏற்ப, பொருத்தமான மாற்று குடும்ப அமைப்பின் மூலம் பராமரிக்கப்பட வேண்டும். |
| 21. | குழந்தைகள் தத்து கொடுக்கப்படும் பொழுது, அவர்களின் நலனே முக்கிய காரணியாக இருக்க வேண்டும். |
| 22. | அகதிகளாக உள்ள அல்லது அகதி அந்தஸ்து கோரும் குழந்தைகளுக்கும் அனைத்து உரிமைகளும் உண்டு. |
| 23. | மாற்று திறனுள்ள குழந்தைகளுக்கு அதிக பட்ச சுயசார்பு மற்றும் சமூக ஒன்றிணைப்பை உள்ளடக்கிய நல்ல முழுமையான வாழ்க்கையைப் பெற உதவும் வகையில் விசேஷ கவனிப்பு, கல்வி, பயிற்சி அளிக்கப் பட வேண்டும். |
| 24. | அதிகபட்ச ஆரோக்கியத்தை அடையவும் நோய்க்கான சிகிச்சை மற்றும் தேகநல மறு சீரமைத்தலுக்கான வசதிகளைப் பெறவும் குழந்தைக்கு உரிமையுள்ளது. |
| 25. | அரசு இல்லங்களில் வளர்ந்து வரும் குழந்தைகளுக்கு அவர்களின் நிலை குறித்து முறையான கால இடைவெளியில் பரிசீலனை செய்யப்பட வேண்டும். |
| 26. | ஒவ்வொரு குழந்தையும் சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக காப்புறுதி போன்ற அம்சங்களினால் பயனடையக்கூடிய உரிமை பெற்றவராவர். |
| 27. | உடல், மனம், ஆன்மா, ஒழுக்கம் மற்றும் சமூக ரீதியான முழு வளர்ச்சியடைய குழந்தைகளுக்கு உரிமையுண்டு. |
| 28. | கல்வி பெறும் உரிமை குழந்தைகளுக்கு உள்ளது. ஆரம்பக் கல்வியை அனைவருக்கும் கட்டாயமாக்குதலும், இலவசமாக கிடைக்கச் செய்தலும் ஆகும். |
| 29. | குழந்தைகளுக்கு தரப்படும் கல்வி தனி மனித ஆளுமை, திறமைகள், மனம் மற்றும் உடல் ரீதியான திறமைகள் வளர உதவியாக இருக்க வேண்டும். அவர்கள் தங்களது கலாச்சாரத்தையும், பிறரது கலாச்சாரத்தையும் மதிக்கத் தயார்படுத்த வேண்டும். |
| 30. | சிறுபான்மையினர் தங்களது கலாச்சாரத்தையும், மதம் மற்றும் மொழியினை உபயோகிக்க உரிமை உள்ளது. |

| | |
|---|---|
| 31. | ஓய்வு, பொழுதுபோக்கு, விளையாட்டு, கலாச்சார நடவடிக்கைகளில் பங்கேற்பு போன்றவற்றிற்கு குழந்தைகளுக்கு உரிமை உண்டு. |
| 32. | பொருளாதாரச் சுரண்டலில் இருந்தும், அவர்களின் ஆரோக்கியம், கல்வி, வளர்ச்சி ஆகியவற்றைப் பாதிக்கக்கூடிய வேலைகளில் பங்கேற்பதில் இருந்தும் பாதுகாக்கப்பட குழந்தைகளுக்கு உரிமை உண்டு. |
| 33. | போதைப் பொருள் உற்பத்தி, விற்பனை, உபயோகிப்பு ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கப்பட குழந்தைகளுக்கு உரிமை உண்டு. |
| 34. | குழந்தைகள் அனைத்துவிதமான பாலியல் சுரண்டல் மற்றும் பாலியல் வன்முறைகளிலிருந்து பாதுகாக்கப்பட உரிமையுள்ளது. |
| 35. | குழந்தைகள் விற்பனை, கடத்தல் ஆகியவற்றைத் தடுக்க, பொருத்தமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். |
| 36. | குழந்தைகள் நலன் தொடர்பான எந்தவொரு அம்சத்திற்கும், தீங்கு விளைவிக்கக்கூடிய எல்லாவிதமான சுரண்டல்களிலிருந்தும் குழந்தைகளைக் காக்க வேண்டியது அரசின் கடமையாகும். |
| 37. | சித்ரவதை, கொடுமை, தண்டனைக்கு எந்தக் குழந்தையையும் உட்படுத்தக் கூடாது. சட்ட விரோதக் கைது, சுதந்திரம் மறுப்பு போன்றவற்றிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். 18 வயதுக்குட்பட்டவர் செய்த குற்றங்களுக்கு, மரண தண்டனையோ, ஆயுள் தண்டனையோ விதிக்கப்படக் கூடாது. ஒரு குழந்தை கைது செய்யப்பட்டால், சட்ட உதவிக்கும், குடும்பத்தோடு தொடர்பு கொள்வதற்கும் உரிமை உண்டு. |
| 39 | ஆயுத மோதல்கள், சித்ரவதை, புறக்கணிப்பு, சுரண்டல் போன்ற கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்ட குழந்தைகளுக்குத் தகுந்த சிகிச்சை பெறவும், சமுதாயத்தோடு ஒருங்கிணையவும் உரிமை உண்டு. |
| 40 | சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் குழந்தைகளுக்கும், சட்ட உதவி பெறவும், சமுதாயத்தில் ஆக்கபூர்வமாகப் பங்கு பெற உதவும் வகையிலும் கௌரவமாய் வாழும் வகையிலும் சிகிச்சை பெறவும் உரிமை உண்டு. |

# குழந்தை உரிமைகள் மீதான ஐ.நா. உடன்படிக்கையின் சிறப்பான இரண்டு நெறிமுறைகள்

குழந்தை உரிமைகள் உடன்படிக்கை ஏற்றுக்கொண்ட பிறகு தொடர் நடவடிக்கையாக 2000ம் ஆண்டு குழந்தை உரிமைகள் சார்ந்த சிறப்பான இரண்டு நெறிமுறைகளை வகுத்துள்ளது.

1. குழந்தைகள் விற்பனை, குழந்தை விபச்சாரம் மற்றும் குழந்தை ஆபாசம் பற்றிய சிறப்பான நெறிமுறை

குழந்தைகள் விற்பனை, குழந்தை விபச்சாரம் மற்றும் குழந்தையை ஆபாசமாக சித்தரித்தல் ஆகியவற்றிற்கான சிறப்பான நெறிமுறைகளை 25ம் தேதி மே மாதம் 2000ம் ஆண்டு ஐ. நா. சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த நெறிமுறைகள் 2002ம் ஆண்டு ஜனவரி மாதம் 18ம் தேதி அன்று அமுல் படுத்தப்பட்டது.

குழந்தை உரிமைகளின் நோக்கங்களை அடையவும், குறிப்பாக விதி 1,11,21,32,33,34,35, மற்றும் 36 ஆகியவற்றை நிறைவேற்றவும், மேலும் குழந்தைகள் விற்பனை, குழந்தை விபச்சாரம், குழந்தையை ஆபாசமாக சித்தரித்தல் ஆகியவற்றை தடை செய்வது மற்றும் தடை செய்வதற்கான செயல்பாடுகளுக்கு உத்திரவாதம் அளித்தல்.

பொருளாதார சுரண்டல் மற்றும் குழந்தைகளின் கல்விக்கு குறுக்கீடு செய்தல், ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவித்தல், உடல், மனம், ஆன்மீகம், ஒழுக்கம், சமூக வளர்ச்சி, குழந்தை விற்பனை, குழந்தை விபச்சாரம், குழந்தையை ஆபாசமாக சித்தரித்தல் மற்றும் பாலியல் துன்புறுத்தல் போன்ற குழந்தை உரிமைகளுக்கு எதிரான செயல்களிலிருந்து குழந்தைகளை பாதுகாப்பதற்கான உத்திரவாதம் அளித்தல்

## இந்த உடன்படிக்கையில்

- குழந்தைகள் விற்பனை, குழந்தை விபச்சாரம் மற்றும் குழந்தையை ஆபாசமாக சித்தரித்தல் ஆகியவற்றை தடைச்செய்தல்
- தற்போதுள்ள நெறிமுறைகளில்

அ. குழந்தைகள் விற்பனை என்பது குழந்தையை ஒரு நபர் அல்லது குழுவாக ஒரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு பணத்துக்காகவோ அல்லது வேறு காரணத்திற்காகவோ கடத்துதல்

ஆ. குழந்தை விபச்சாரம் என்பது பணம் ஈட்டுவதற்காக பாலியல் செயல்களில் அல்லது வேறு செயல்களில் ஈடுபடுத்துவது

இ. குழந்தையை ஆபாசமாக சித்தரித்தல் என்பது உண்மையான அல்லது உருவகப் படுத்தப்பட்ட அல்லது எந்த ஒரு பாலியல் நோக்கத்திற்காக உடலின் அந்தரங்க உறுப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துதல் போன்ற பல விதிகள் உள்ளன.

2. ஆயுதப் போர்ப்படைகளில் குழந்தைகளை ஈடுபடுத்தாமல் இருப்பதற்கான சிறப்பான நெறிமுறை

ஆயுதப் போர்ப்படைகளில் குழந்தைகளை ஈடுபடுத்தாமல் இருப்பதற்கான சிறப்பு நெறிமுறைகளுக்கான தீர்மானத்தை 25ம் தேதி மே மாதம் 2000ம் ஆண்டில் ஐ. நா. சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த நெறிமுறைகள் 2002ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12ம் தேதி அன்று அமுல் படுத்தப்பட்டது.

18வயதிற்கு கீழ் உள்ள குழந்தைகளை ஆயுதப் போர்ப்படைகளில் ஈடுபடுத்தாமல் இருப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். போர்ப்படைகளில் ஈடுபடுத்துவதால் குழந்தைகளின் அனைத்து உரிமைகளும் பறிக்கப்படுகிறது.

1. 18 வயதிற்கு கீழ் உள்ள குழந்தைகளை ஆயுதப் படைகளில் கட்டாயப்படுத்தி ஈடுபடுத்துவதை தடை செய்தல்
2. 18 வயதிற்குட்பட்ட தன்னார்வலர்கள் ஆயுதப்படையில் நேரடியாக பங்கு பெறுவதிலிருந்து விலக்கிக் கொள்ளுதலை உறுதி செய்தல்



# நிலைத்த மேம்பாட்டிற்கான இலக்குகள்

குழந்தைகள் சிறப்பு வாய்ந்தவர்கள் மற்றும் தனித்துவம் பெற்றவர்கள். ஆகவே அவர்களின் உரிமைகளை பேணிக் காப்பதற்காக உலகளவில் முதன் முதலில் குழந்தைகளுக்கான ஓர் உடன்படிக்கையை ஐ.நா. சபையால் 1989ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. இதன் அடிப்படையில் நாட்டின் வளர்ச்சிகளை மேம்படுத்துவதற்கான இலக்குகளை 2000ம் ஆண்டு மில்லேனியம் மேம்பாட்டிற்கான இலக்குகள் என்று எட்டு இலக்குகளை நிர்ணயித்தது. 2015ம் ஆண்டிற்குள் இந்த எட்டு இலக்குகளையும் நிறைவேற்றுவதாக இருந்தது. ஆனால் இவற்றில் ஒரு சில இலக்குகளையே நிறைவேற்ற முடிந்தது. சில இலக்குகள் நிறைவேற்றுதற்கான செயல்பாடுகளில் தொய்வு ஏற்பட்டுள்ளதால் அவற்றை அடைவதற்கு இன்னும் சில வருட கால அவகாசம் தேவைப்பட்டது. ஆகவே இந்த இலக்குகளுடன் இன்னும் சில வளர்ச்சிக்கான இலக்குகளை நிர்ணயித்து மொத்தம் 17 இலக்குகளை **நிலைத்த மேம்பாட்டிற்கான இலக்குகளாக** 2015ம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. 2030ம் ஆண்டிற்குள் இந்த 17 இலக்குகளையும் நிறைவேற்றுவதே இதன் முக்கிய நோக்கமாகும். இந்த இலக்குகளில் குழந்தையின் உரிமை மற்றும் வளர்ச்சி பெறும் பங்கு வகித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



# குழந்தை உரிமைகளைப் பற்றி புரிந்து கொள்வோம்

## 1.1 குழந்தை என்பவர் யார் ?

ஆண், பெண், சாதி, மதம், பால், நிறம், மொழி, சொத்து, பிறப்பிடம் போன்ற எவ்வித வேறுபாடுகளும் இன்றி 18 வயதிற்குட்பட்ட அனைவரும் குழந்தைகள் ஆவர்.



கருவிலிருந்து 18 வயது பூர்த்தியடையும் வரை




குழந்தை உரிமைகள் மீதான ஐ.நா. உடன்படிக்கை 54 ஷரத்துக்கள் (விதிகள்) உள்ளடக்கியது ஆகும். இந்த அனைத்து ஷரத்துக்களையும் தொகுத்து குழந்தையின் நான்கு அடிப்படை உரிமைகளாக வரையறுக்கப்பட்டுள்ளது.

## 1.2.1 வாழும் உரிமை :

வாழ்தல் என்பது குழந்தையின் உயிர் மற்றும் ஆரோக்கியத்தைச் சார்ந்தது. வாழும் உரிமை எல்லாவற்றிற்கும் முதன்மையான உரிமை ஆகும். இதில் குழந்தையின் மதம், மொழி, பாலினம், மருத்துவம், சுகாதாரம் மற்றும் குடியுரிமை உள்ளடங்கியது. இந்த உரிமை கருவுற்ற நாளிலிருந்தே தொடங்குகிறது. எனவே கருவுற்றத்தாயின் நலத்தைப் பேணுவதும் குழந்தைகள் உரிமையின் பால்பட்டதே.

உயிருடன் பிறப்பதற்கு குழந்தைக்கு உரிமை உண்டு. குழந்தை உயிருடன் பிறக்க வழி செய்வது பெற்றோரின் கடமையாகும்




இவை அனைத்தையும் பெறுவது ஒரு குழந்தையின் உரிமை ஆகும்.

## 1.2.2 வளர்ச்சிக்கான உரிமை :

ஒரு குழந்தையின் தரமான வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து விதமான வளர்ச்சியையும் உள்ளடக்கியதே வளர்ச்சிக்கான உரிமை ஆகும்.

உடல் மற்றும் மன வளர்ச்சி

கல்வி தடையில்லாமல் கற்றல்

விளையாட்டு, பொழுதுபோக்கு நிகழ்ச்சி மற்றும் ஓய்வு பெறுதல்

கலாச்சாரத்தைப் பின்பற்றுதல்

ஆரோக்கியத்தைப் பேணிக் காத்தல்

தனித் திறன் வளர்ச்சி

ஆளுமைத் திறனை வளர்த்துக்கொள்ளுதல்

பொது தகவல்களைப் பெறுதல்



## 1.2.3 பாதுகாப்பு உரிமை :

குழந்தைகள் உடல் மற்றும் மன வலிமையற்ற பருவம் என்பதால் அவர்களுக்குப் பல வன்கொடுமைகள் நடக்கின்றன. அவ்வாறு நடக்கின்ற வன்கொடுமைகளிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதே பாதுகாப்பு உரிமை ஆகும்.



- தீங்கிழைத்தல்
- புறக்கணித்தல்
- கடத்தல்
- பாலியல் துன்புறுத்தல்
- சுரண்டல்
- பாரபட்சம்
- போதைப் பொருட்கள் உபயோகத்திற்குப் பயன்படுத்தப்படுதல்
- நெருக்கடி கால விளைவுகளுக்கு பலியாகுதல்



பாதுகாப்பு

## 1.2.4 பங்கேற்கும் உரிமை :

குழந்தைகள் சமூகம் தொடர்பான தகவல்களைப் பெற்று தங்களை மேம்படுத்திக் கொள்வதற்குப் பங்கேற்கும் உரிமை மிக முக்கியமானதாக அமைகிறது. மேலும் முக்கியமாக தம்மை பாதிக்கும் எந்த ஒரு செயல் குறித்தும் கருத்து கூறுவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு.

- கருத்துக்களைக் கலந்தாலோசித்தல்
- சுதந்திரமாக கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பளித்தல்
- குழுவாக செயல்படுதல்
- சங்கம் அமைத்து செயல்படுதல்
- குடும்பம் மற்றும் சமூக நிகழ்வுகளில் பங்கேற்றல்
- பள்ளி நிகழ்வுகளில் பங்கேற்றல்



## 1.3 உரிமைகளின் ஒருங்கிணைப்பு அவசியம்

நான்கு அடிப்படை உரிமைகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாகும். இவற்றில் ஒரு உரிமைக்கு பாதிப்பு ஏற்பட்டாலும் மற்ற உரிமைகளும் பாதிக்கப்படுகின்றன.



# அத்தியாயம்



# 2

# குழந்தைகளின் பாதுகாப்பற்ற சூழல்

## 2.1 குழந்தை பாதுகாப்பின் முக்கியத்துவம்

குழந்தை உரிமைகளில் மிக முக்கியமானது பாதுகாப்பு உரிமை ஆகும்

ஏன் குழந்தைகளுக்கு பாதுகாப்பு அவசியம்?

குழந்தைகள் இயல்பாகவே வெகுளித்தனமாகவும்,
உடல் வலிமை இல்லாதவர்களாகவும்,
முழு மன வளர்ச்சியற்றவர்களாகவும்,
துன்பங்களுக்கு பலியாகும் பருவத்தில் உள்ளதால் அவர்களுக்கு பாதுகாப்பு அவசியமாகிறது.

குழந்தைகளின் பாதுகாப்பு உரிமை மற்ற உரிமைகளுடனும் நெருங்கிய தொடர்புடையதாகும். எப்படியெனில் பாதுகாப்பு உரிமை பாதிக்கப்பட்ட குழந்தைக்கு அதனுடைய மற்ற உரிமைகளும் பறிக்கப்படுவதைக் கொண்டு இதனை நாம் தெரிந்துக் கொள்ளலாம். உதாரணமாக உடல் உழைப்பு மூலம் சுரண்டலுக்கு உட்படுத்தப்பட்டோ அல்லது கொடுமைக்குள்ளாக்கப்பட்டோ இருக்கும் பட்சத்தில் அக்குழந்தையினுடைய ஆரோக்கியம், கல்வி பறிக்கப்படுகிறது. மேலும் தனக்கு நடந்த சம்பவத்தை கூறுவதற்கு பயப்படுகிறது.



பாதுகாப்பான சூழலை நாம் உருவாக்கினால் மட்டுமே குழந்தைகளின் உடல் உழைப்பு சுரண்டப்படாமலும், பாலியல் ரீதியாக தீங்கிழைக்கப்படாமலும் குழந்தையைப் பாதுகாக்க முடியும்.

பாதுகாப்பான சூழலில் உள்ள குழந்தையால் மட்டுமே உடல், மன ஆரோக்கியம், சுயமரியாதை, தன்னம்பிக்கையுடன் வளரும்.

## 2.2 குழந்தைகளுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதற்கான காரணங்கள்:

நுகர்வோர் கலாச்சாரம், மூட நம்பிக்கை, பிற்போக்கான பழக்க வழக்கங்கள், சமூக பாரபட்சம் பெரியோர் சுய நலத்திற்கு குழந்தைகளை பயன்படுத்துதல், இவை அனைத்தும் குழந்தைகளுக்குப் பாதுகாப்பற்ற சூழல் உருவாவதற்கான காரணங்களாக அமைகின்றன. தெரிந்த நபர்களாலேயே அதிகமான பிரச்சனைகளை குழந்தைகள் எதிர் கொள்கின்றனர்.

## 2.3 குழந்தைகளின் உரிமைகளுக்கு எதிராக நடக்கும் துன்புறுத்தல்கள்

1. உடல் ரீதியான துன்புறுத்தல்
2. மன ரீதியான துன்புறுத்தல்
3. பாலியல் ரீதியான துன்புறுத்தல்
4. புறக்கணித்தல்
5. பாகுபாடு / பாரபட்சம்
6. குழந்தைத் தொழிலாளர்
7. குழந்தைச் சுரண்டல்
8. குழந்தைக் கடத்தல்
9. இள வயதுத் திருமணம்
10. பெண் சிசுக் கொலை / கருக்கொலை
11. நெருக்கடி கால நிலை (இயற்கை பேரழிவு)
12. எச்.ஐ.வி / எய்ட்ஸ்



### 2.3.1 உடல் ரீதியான துன்புறுத்தல்:

குழந்தைகளை அடித்தல், கிள்ளுதல், சூடு போடுதல், கண்டிப்பு என்ற பெயரில் அவர்களுக்கு தண்டனை அளித்தல் (வீட்டில் மற்றும் பள்ளிக்கூடத்தில்), ஓய்வு அளிக்காமல் வேலை செய்யச் சொல்லுதல் இவை அனைத்தும் குழந்தைகளுக்கு எதிராக நடக்கும் உடல் ரீதியான துன்புறுத்தல் ஆகும். இதனால் குழந்தைகள் மன உளைச்சலுக்கும் ஆளாகின்றனர்.

**உடல் ரீதியான துன்புறுத்தலால் குழந்தைகள் அடையும் பாதிப்புக்கள்**

- தன்னைத்தானே துன்புறுத்திக்கொள்ளும் செயல்கள்
- தனக்குள் அழுந்திருத்தல்
- ஆக்ரோஷமாக இருத்தல்
- பள்ளிக்குத் தாமதமாக வருதல் (அ) பள்ளியில் இருந்து நேரம் கடந்து செல்லுதல்
- அடிக்கடி உடலின் காயத்தினால் வருந்துதல் (அ) நடமாட கஷ்டப் படுதல்
- அடிக்கடி சோர்வுடன் காணப்படுதல்
- அடிக்கடி நோய் வாய்ப்படுதல்



## 2.3.2 மன ரீதியான துன்புறுத்தல்:



மன ரீதியான துன்புறுத்தல் என்பது குழந்தைகளின் மனதை பாதிக்கும் வகையில் ஏற்படுத்தும் செயல்கள் ஆகும். குழந்தைகளை மிரட்டி பேசுதல், பயமுறுத்துதல், இழிவான வார்த்தைகளை உபயோகித்தல், மற்ற குழந்தைகளுடன் ஒப்பிடுதல், சாதி, மத மற்றும் கலாச்சாரம் சார்ந்த வார்த்தைகளை பயன்படுத்துதல், பெற்றோரின் நடவடிக்கையை வைத்துப் பிள்ளைகளை இழிவாக பேசுதல், மாற்றுத் திறனாளி குழந்தைகளை நொண்டி, முடம், குருடு போன்ற வார்த்தைகளை பயன்படுத்துதல், மற்றும் மூட நம்பிக்கையால் குழந்தைகளை இழிவாக பேசுதல் (குழந்தை பிறந்த நேரம், கரு தரித்த காலம் போன்றவை) இவை அனைத்தும் குழந்தைகளின் மனதை அதிகளவில் பாதிக்கின்றன.

**மன ரீதியான துன்புறுத்தலால் குழந்தைகள் அடையும் பாதிப்புக்கள்**

- நடவடிக்கைகளில் குளறுபடிகள்
- அழிக்கும் மனோபாவம்
- மனவியாதிக்கான செயல்பாடுகள்
- மிகவும் பணிந்து பேசுதல்
- ஆக்ரோஷமான மனநிலை
- குற்றம் சார்ந்த நடவடிக்கைகள்
- வளர்ச்சியில் பின்னடைவு
- உணவு உட்கொள்ளுதல் சம்பந்தமான நோய்கள்
- தாழ்வு மனப்பான்மை
- குறைந்த சுயமதிப்பீடு



## 2.3.3 பாலியல் ரீதியான துன்புறுத்தல்



குழந்தைகளை பாலியல் கண்ணோட்டத்தில் பார்ப்பது, அவர்களுடைய அந்தரங்க உறுப்புகளைத் தொடுவது, தொடச் செய்வது அல்லது காண்பிப்பது, பாலியல் தொடர்பான வார்த்தைகளை பயன்படுத்துவது, பாலியல் சம்மந்தமான படம் போட்டுக் காண்பிப்பது, பாலியல் செயல்களை செய்ய சொல்லி அதை படமாக்குவது, அந்தரங்க உறுப்புகளை படம் எடுத்தல், பாலியல் உறவுக்கு உட்படுத்துதல், விபச்சாரத்தில் ஈடுபடுத்துதல் போன்றவை பாலியல் ரீதியான துன்புறத்தல் ஆகும்.



பாலியல் ரீதியான துன்புறத்தலால் குழந்தைகள் அடையும் பாதிப்புக்கள்

- தனக்குள் அழுந்திருத்தல்
- கொடிய மனச்சோர்வு
- கவர்ச்சி காட்டிப் பழுகுதல்
- சுயமதிப்பீடு இன்மை
- தாழ்வு உணர்ச்சி
- தன்னம்பிக்கை இன்மை
- நண்பர்களோடு பழுகுவதில் இடையூறுகள்
- உடல் எடையில் மாற்றம்
- தற்கொலை முயற்சி
- அடிக்கடி உணர்ச்சி வசப்படுதல்
- உணர்ச்சிகளைக் கையாளுவதில் வெளிப்படுத்துவதில் தடைகள்
- எவரேனும் நட்புரீதியாக தொட்டால்கூட பயப்படுதல்

பாலியல் ரீதியான துன்புறுத்தலால் குழந்தையின் உடல், மன ஆரோக்கியம் பெரிதும் பாதிக்கின்றது. இது அவர்களின் வாழ்க்கை முழுவதும் அழியாத சின்னமாக மனதில் நின்று விடுகின்றன. இதனால் சில குழந்தைகள் இறந்தும் விடுகின்றனர். மேலும் தற்கொலை முயற்சியும் செய்கின்றனர்.

## 2.3.4 புறக்கணித்தல்



புறக்கணிப்பு என்பது ஒரு குழந்தைக்கு உணவு, உடை, இருப்பிடம், பெற்றோரின் அன்பு, அரவணைப்பு மற்றும் பராமரிப்பு அளிக்காமல் குழந்தையின் வளர்ச்சியையும், ஆரோக்கியத்தையும் அபாய நிலைக்கு தள்ளுவது ஆகும். பெற்றோர் அல்லது பாதுகாவலரால் கைவிடப்பட்ட அல்லது அனாதையாக்கப்பட்ட குழந்தை புறக்கணிக்கப்பட்ட குழந்தையாகும்.

## 2.3.5 பாகுபாடு / பாரபட்சம்

ஆண் / பெண் பாகுபாடு, சாதி, மத, இன பாகுபாடு, பொருளாதார ரீதியான பாகுபாடு, நிறம் மற்றும் உடல் உறுப்புகளை வைத்து பாகுபாடு, கல்வி பயிலுவதில் பாகுபாடு பார்த்தல் ஆகும்.

குழந்தையைப் புறக்கணித்தல் மற்றும் குழந்தைகளிடம் பாகுபாடு பார்ப்பதால் குழந்தைகள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். இதனால் அவர்கள் சமூக விரோத செயல்களில் எளிதில் ஈடுபடுகின்றனர்

## 2.3.6 குழந்தைக் கடத்தல்



குழந்தைகளின் விருப்பத்திற்க்கு மாறாக, கட்டாயப் பாலியல் தொழிலுக்கோ, திருமணத்திற்கோ, கொத்தடிமையாக்கவோ, பிச்சை எடுக்கவோ, உறுப்புகளை விற்பதற்கோ, தத்து கொடுக்கவோ, ஏமாற்றுதல், வற்புறுத்துதல், நேரடி அல்லது மறைமுக அச்சுறுத்துதல், அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல், எல்லைகளைக் கடந்து தவறான வழிகளில் பணியழைப்பு, இடமாற்றம், பலவந்தமாக அழைத்துச் செல்லுதல் போன்ற எல்லாச் செயலுக்காக பெற்றோரின் விருப்பத்துடனோ அல்லது பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாக ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு குழந்தையை கடத்துகின்றனர்.

**எந்தெந்த செயல்களுக்காகக் குழந்தைகளைக் கடத்துகின்றனர்?**

- குழந்தைத் தொழிலாளர் (வீடு, கடை, உணவகங்கள், சிறு தொழிற்சாலை, கட்டிடப் பணி)
- கொத்தடிமையாக வேலை செய்வதற்கு
- பாலியல் செயல்களுக்கு
- பிச்சை எடுப்பதற்கு
- உடல் உறுப்புகளை விற்பதற்கு
- தத்து கொடுப்பதற்கு
- குழந்தைத் திருமணத்திற்கு
- சமூக விரோத செயல்களில் ஈடுபடுத்துவதற்கு (திருட்டு மற்றும் போதைப் பொருள் பயன்பாட்டிற்கு)
- பெரியவர்களின் பகையின் காரணமாக கடத்துதல்
- குழந்தையைப் பணயமாக வைத்து பணம் பறிப்பதற்கு









பாலியல் மற்றும் கடத்தல்காரர்கள் செயல்படும் முறைகள்:



- குடும்பத்தின் நலன் விரும்பிகளாக அவர்களை அணுகுவது
- உள்ளூர்வாசிகளின் துணையை இதற்காகவே நாடுவது
- பார்வைக்கு சந்தேகம் எழாத வகையில் பேருந்து நிலையத்திலோ, இரயில் நிலையத்திலோ குழந்தைகளை அணுகுவது
- பள்ளியிலோ அல்லது விளையாடும் இடத்திலோ குழந்தையிடம் நட்புடன் பழகுதல்
- கடன் தொல்லையிலிருந்து விடுபட குழந்தையை விற்பதற்கு பெற்றோர்களை சம்மதிக்க வைப்பது அல்லது பணத்திற்காக குழந்தையை விற்பது தவறில்லை என சமாதானம் கூறுவது
- குடும்ப நண்பர்கள் போல் பழகுதல்
- குழந்தைகளுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருவதாக பெற்றோர்களுக்கு உறுதி அளித்தல்
- சிறந்த முறையில் திருமணம் செய்து தருவதாக உறுதி கூறுதல்
- வெளிநாடுகளிலிருந்து வரும் சுற்றுலா பயணிகள் குழந்தைகளுக்கு உதவி புரிவதுடன் அவர்களை பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்துதல்

## 2.3.7 குழந்தைச் சுரண்டல்

சுரண்டல் என்பது ஒருவகையான திருட்டு அல்லது சூறையாடல் ஆகும். ஒருவரின் உடல் உழைப்பை, உடல் நலத்தை சுயலாபத்திற்காகப் பயன்படுத்திக் கொள்வது அல்லது திருடுவது சுரண்டல் எனலாம்.

ஒரு குழந்தை ஈடுபடும் எந்த ஒரு வேலையும், பொருளாதாரச் சுரண்டலுக்கு அக்குழந்தையை பயன்படுத்துவதாகவும், ஆபத்து நிறைந்ததாகவும், கல்வி கற்க இடையூறாகவும், அதன் உடல், மன மற்றும் சமூக வளர்ச்சி பாதிப்படையும் வகையிலும் இருக்குமேயானால் அக்குழந்தை சுரண்டலுக்கு உள்ளாகியுள்ளது எனப் பொருள்.

## 2.3.8 குழந்தைத் தொழிலாளர்

18 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் கல்வி மறுக்கப்பட்டு அனைத்து விதமான மற்றும் ஆபத்து விளைவிக்கக்கூடிய தொழிலில் குழந்தைகளை ஈடுபடுத்துவதே குழந்தை தொழிலாளர் ஆகும்.

குழந்தைத் தொழிலாளர் முறையை ஒப்பந்த அடிப்படையிலும் அல்லது ஒப்பந்தமற்ற அடிப்படையிலும் தொழிலில் அமர்த்துகின்றனர்.



குழந்தைகளால் மட்டுமே அதிகமான அளவில் செய்யமுடியும் என்ற நோக்கத்தோடு சில தொழில்களில் குழந்தைகளை மட்டுமே அமர்த்துகின்றனர். குழந்தைகள் தொழிலாளர்களாகவும் பணம் ஈட்டும் இயந்திரமாகவும் மாற்றப்படுகின்றனர்.

குழந்தைத் தொழிலாளர்களாக செல்லக்கூடிய சூழல்:

- குடும்ப வறுமை
- பெற்றோரின் கடனை அடைப்பதற்காக
- குடும்பத்தில் அதிகமான குழந்தைகள் பிறப்பு
- பெற்றோரின்மை (அ) நோய்வாய்ப்பட்ட பெற்றோர்
- படிப்பில் நாட்டமின்மை

குழந்தைச் சுரண்டல் மற்றும் குழந்தைத் தொழிலாளர்கள் அடையும் பாதிப்புகள்

- குழந்தைப் பருவம் பறிக்கப்படுகிறது
- கல்வி, விளையாட்டு கிடைக்காமை
- தேவையான ஓய்வு மற்றும் தூக்கமின்மை
- ஆரோக்கியமான உணவு கிடைக்காமை
- நோய்வாய்ப்படுதல்
- விபத்து ஏற்படுதல் அல்லது விபத்தினால் உயிர் போகுதல் / உடல் உறுப்புகளை இழத்தல்
- சுகாதாரம் மற்றும் தேவையான மருத்துவம் கிடைக்காமை
- அதிக நேரம் வேலை செய்வதால் உடல் மற்றும் மனச்சோர்வு அடைதல்
- பாதுகாப்பின்மை - உடல் மற்றும் பாலியல் தொந்தரவுகளை சந்தித்தல்



## 2.3.9 குழந்தைத் திருமணம்

குழந்தைத் திருமணம் என்பது 18 வயதுக்குட்பட்ட சிறுமியை 21 வயதுக்குட்பட்ட அல்லது அதற்கு மேல் இருக்கக்கூடிய ஒருவருக்கு திருமணம் செய்வதே குழந்தைத் திருமணம் ஆகும். குழந்தைத் திருமணமானது சமுதாயத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பழக்கமாகவே உள்ளது.

திருமணம் செய்யும் பெண் 18 வயதுக்குட்பட்டவராக இருந்தாலோ அல்லது ஆண் 21 வயதுக்குட்பட்டவராக இருந்தாலோ, அத்தகைய திருமணம் ஒரு குழந்தைத் திருமணமாக கருதப்படும்.

தமிழ் நாட்டில் 81.3% குழந்தைத் தொழிலாளர்கள் கல்வி பயின்ற (எழுத படிக்க மட்டும் தெரிந்த) குழந்தைகளாக உள்ளனர்.

இந்தியாவில் 44 இலட்சம் குழந்தைகள் (5-14 வயதிறகுட்ப்பட்ட) முழு நேர தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இதில் 65.3% குழந்தைகள் கல்வி பயின்ற குழந்தைகள்.

Source: Unicef's State of Child Workers in India Report
Times of India, 24th June 2017

குழந்தை என்பது 18 வயது முடிவடையாத பெண்களையும், 21 வயதிற்குட்பட்ட ஆண்களையும் குறிக்கும்.



குழந்தை ஒரு பெற்றோரின் உடைமை என்பதால் குழந்தையின் கருத்தை அறியாமலும், விருப்பத்திற்கு எதிராகவும், ஒரு பெண் குழந்தையைத் திருமண பந்தத்தில் இணைக்கின்றனர். இப்பழக்கமானது, பெற்றோர் குழந்தையை ஒரு அசையும் சொத்தாக நினைக்கின்றனர் என்ற கருத்தை வலியுறுத்துகிறது.

### குழந்தைத் திருமணம் நடக்கக்கூடிய வாழ்க்கைச் சூழல்:

- குடும்ப வறுமை
- பெண்களை குறித்த தாழ்வான கண்ணோட்டம்
- பெண் குழந்தைகளைப் பொருளாதார சுமையாகக் கருதுவது
- சமுதாய பழக்க வழக்கங்கள், மரபுகள்
- சமுதாய நெருக்கடி
- பருவமடைந்த பின்னர் பாதுகாப்பு காரணம் காட்டி திருமணம் செய்தல்
- சிறுமிகள் இளைஞர்களுக்கு இடையே ஏற்படுகின்ற இனக் கவர்ச்சி
- பெரியோர்களின் அறியாமை
- பெற்றோர் இன்மை – பாதுகாவலர் பெண் குழந்தையை சுமையாக கருதுவது

## குழந்தைத் திருமணத்தால் குழந்தைக்கு ஏற்படும் பாதிப்புகள்

### உடல் ரீதியான பாதிப்புகள்

- பேறு காலத்தில் இறத்தல்-தாய் (அ) குழந்தை இறப்பு
- அடிக்கடி கருச்சிதைவு
- இரத்தசோகை (அ) ஊட்டச்சத்து பற்றாக்குறை
- உடல் உள்ளுறுப்புகள் பலவீனமடைதல்
- இரத்த அழுத்தம் அதிகமாகுதல் (அ) குறைதல்
- எடை குறைவான குழந்தை பிறத்தல்
- மன வளர்ச்சி (அ) உடல் வளர்ச்சி குன்றிய குழந்தைகள் பிறத்தல்
- அதிக வேலை பளு – உடல் சோர்வு ஏற்படுகின்றன
- பாலியல் துன்புறுத்தல்

### மன ரீதியான பாதிப்புகள்

- மன அழுத்தம்
- தாழ்வு மனப்பான்மை
- பிரச்சனைகளை எதிர்கொள்ளும் மன வலிமையின்மை
- தற்கொலைக்கு முயற்சி செய்தல்

### சமுதாய ரீதியான பாதிப்புகள்

- பெண் கல்வி தடைப்படுதல்
- பொருளாதார பின்னடைவு
- பாலின சமனின்மை
- குடும்ப வன்முறை
- பாலியல் துன்புறுத்தல்

| | இந்தியா | தமிழ்நாடு |
|---|---|---|
| 18 வயது முடிவதற்குள் திருமணம் ஆன பெண் குழந்தைகள் - | 26.8% | 15.7% |
| 21 வயது முடிவதற்குள் திருமணம் ஆன ஆண் குழந்தைகள் - | 20.3% | 17% |

*Source: NFHS - 4*

## 2.3.10 பெண் சிசுக் கொலை / கருக்கொலை



தேசத்தின் பெருமையே பெண் குழந்தை

நம் நாட்டில் பரவலாக பெண் இனம் என்றாலே தாழ்வான எண்ணத்தின் அடிப்படையில் பெண் கருக்கொலை, பெண் சிசுக் கொலை ஆகியவை சமுதாயத்தின் ஒப்புதலுடன், சமுதாய கலாச்சாரம் சார்ந்த காரணங்களாலும் நடைப்பெற்று வருகின்றன. இதனால் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் ஆண் குழந்தைகளின் பிறப்பு விகிதத்தைக் காட்டிலும் குறைந்துள்ளது.

### பெண் சிசுக்கொலை:

ஒரு பெண் குழந்தை உயிருடன் பிறப்பதற்குத் தடையாக இருப்பது, குழந்தை பிறப்பை மறைத்து, அதன் உடலை இரகசியமாகப் புதைப்பது ஆகிய அனைத்தும் பெண் சிசுக்கொலை ஆகும்.

### கருக்கொலை:

கருவில் இருக்கும் குழந்தை பெண் என்று ஸ்கேன் மூலம் தெரிந்தவுடன் அக்குடும்ப அங்கத்தினர்கள் (தாய், தந்தை உள்பட) கருவை அழிப்பதற்கான செயல்களில் ஈடுபடுகின்றனர். இச்செயலை கருக்கலைப்பு என்று கூற இயலாது. ஏனெனில் குழந்தையின் உயிரைக் கொல்வதுடன், குழந்தையின் பிறப்புரிமை பறிக்கப்படுவதால் இச்செயலைக் கருக்கொலை என்றுதான் கூறமுடியும்.



மருத்துவ ஆலோசனைப்படி ஒரு பெண்ணின் உடல் நலம் அல்லது குழந்தையின் உடல் நலம் அல்லது பிரசவத்தில் பிரச்சனை ஆகிய காரணத்திற்காக கருக்கலைப்பு செய்வதற்கு ஒரு பெண்ணிற்கு உரிமை உண்டு.

**பெண் குழந்தையின் உயிர் வாழும் உரிமை பறிக்கப்படுவதற்கான காரணங்கள்**

- கொள்ளி போடுவது மற்றும் வாரிசு என்ற அடிப்படையில் ஆண் குழந்தையை அதிகமாக விரும்புதல்
- பெண் குழந்தை என்றாலே செலவு அதிகமாகும் என்ற எண்ணம்
- வரதட்சணை கொடுக்கவேண்டும் என்ற கட்டாயம்
- பெண் குழந்தை என்றாலே பாதுகாக்க வேண்டும் அல்லது பொறுப்பேற்று வளர்ப்பதில் தயக்கம்
- மூட நம்பிக்கைகள்



சிசு மரண விகிதம் (1000 உயிருடன் பிறக்கும் குழந்தைகளில்)

| | | |
|---|---|---|
| இந்தியா | - | 57 |
| தமிழ் நாடு | - | 21 |

ஆதாரம்: NFHS – 4 (2015 – 16)

## 2.3.11 எச்.ஐ.வி / எய்ட்ஸ்




சமூகத்தில் நிகழும் அத்தனை அவலங்களும் குழந்தைகளையே மிக அதிக அளவில் பாதிக்கின்றன. அதில் ஒன்று எச்.ஐ.வி / எய்ட்ஸ் எனும் தொற்று நோய். வயது வந்தோரின் இயற்கைக்கு முரணான நடவடிக்கைகளால் சமூகத்தில் தற்பொழுது பெருமளவில் உள்ள இந்த உயிர் கொல்லி நோய் ஏதும் அறியாத குழந்தைகளின் மீது அதிக பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. மேலும் சமூக வெறுப்புக்கு ஆளாகி சமூகத்தில் ஒதுக்கப்படும் அவல நிலைக்கு ஆளாகின்றனர்.

எச்.ஐ.வி / எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை இரு பிரிவாக பார்க்கலாம்

1. எச்.ஐ.வி / எய்ட்ஸ் தொற்று நோய்க்கு ஆளான குழந்தைகள்
2. எச்.ஐ.வி / எய்ட்ஸ் தொற்று நோய் உள்ள பெற்றோரைக் கொண்ட அல்லது பெற்றோரை இழந்த குழந்தைகள்

நோய் தாக்கியிருப்பதாகக் கண்டறியப்பட்ட உடனேயே, நோய் தொற்றுக்குள்ளான குழந்தைகள், நோய் தாக்கப்பட்ட பெற்றோரைக் கொண்ட குழந்தைகள் சமூகத்தாலும், உறவினர்களாலும் புறக்கணிக்கப்பட்டு, அனாதைகளாக்கப்பட்டு, குடும்ப அரவணைப்பு மற்றும் பராமரிப்பிலிருந்து தூக்கி எறியப்படுகின்றனர்.

### ஆன்டி ரெட்ரோ வைரல் தெரப்பி (ஏ.ஆர்.டி)

ஏ.ஆர்.டி ஒரு கூட்டு மருந்து சிகிச்சையாகும். ஏ.ஆர்.டி சிகிச்சை உடலில் எச்.ஐ.வி அதிகரிக்கும் வேகத்தைக் குறைக்கிறது. இதனால் எச்.ஐ.வி தொற்று நோயுள்ளவர் நீண்ட நாட்கள் ஆரோக்கியமாக வாழ முடியும். எச்.ஐ.வி தொற்றுள்ளவர்கள் அனைவருக்குமே ஏ.ஆர்.டி சிகிச்சை தேவைப்படுவதில்லை. எச்.ஐ.வியின் பாதிப்பு மிகவும் கடுமையாகி, உடலின் நோய் எதிர்ப்பு சக்தி அதிக அளவில் பலவீனமடைந்தவர்களுக்குத்தான் இந்த சிகிச்சை தேவைப்படும்.

### எச்.ஐ.வி / எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட குழந்தையின் நிலை

- நோய் எதிர்ப்பு சக்தி குறைதல் / அடிக்கடி நோய் வாய்ப்படுதல்
- உடல் நலம் குன்றிப் போகுதல்
- தாய் / தந்தையை இழத்தல்
- இறப்பு ஏற்படுதல்
- சமூக வெறுப்புக்கு ஆளாகுதல்
- உறவினர்களால் ஒதுக்கப்படுவதால் அனாதையாகின்றனர்
- கல்வி தடைப்படுதல்
- பாலியல் ரீதியான துன்புறுத்தலுக்கு ஆளாகுதல்
- தன்னம்பிக்கை இழத்தல்
- மன அழுத்தம் ஏற்படுகிறது

### நிவரோப்பின் வாய் வழி திரவம்

எச்.ஐ.வி-1 ஆல் தாக்கப்பட்ட கருவுற்ற தாயிடமிருந்து குழந்தை பிறக்கும் பொழுது குழந்தைக்கு எச்.ஐ.வி கிருமி பரவாமல் தடுப்பதற்கான வாய் வழியாக கொடுக்கும் மருந்து ஆகும். இது ஏ.ஆர்.டியின் ஒரு பகுதியாகும்.

## 2.3.12 நெருக்கடி கால நிலைகள் (இயற்கைப் பேரழிவு)

சுனாமி, வெள்ளம், புயல், நிலநடுக்கம், வறட்சி என இயற்கையால் ஏற்படும் மாற்றங்களின் போதும், போர், உள்நாட்டு கலவரம், தீ விபத்து போன்ற நெருக்கடி கால கட்டங்களின் போதும் அனைத்து மக்களும் பாதிக்கப்பட்டாலும் குழந்தைகளே அதிக பாதிப்புக்கு ஆளாகின்றனர்.

இந்த நெருக்கடி கால கட்டங்களில் கண் இமைக்கும் நேரத்தில் தாய் தந்தையரை இழந்து குழந்தைகள் அனாதையாகின்றனர்

மேலும் மனிதர்களால் சட்டத்திற்கும் விதிமுறைகளுக்கும் புறம்பாக எழுப்பப்படும் கட்டிடங்கள், கல்விக் கூடங்கள் போன்றவற்றால் நிகழும் திடீர் விபத்துகளுக்கு முதலில் பலியாவது பச்சிளம் குழந்தைகள்தான்.

**குழந்தைகள் அடையும் பாதிப்புகள்**

- தாய், தந்தை அல்லது குடும்பங்களிலுள்ள சக உறுப்பினர்களை இழந்து அனாதையாகுதல்
- குழந்தை இறப்பு ஏற்படுதல்
- ஊட்டச்சத்தின்மை மற்றும் தொற்று நோய்க்கு ஆளாகுதல்
- மன அழுத்தத்திற்கும், பாதிப்புக்களுக்கும் ஆளாகுதல்
- கல்வி தொடர இயலாத நிலை
- குழந்தைகள் கடத்தல் (அ) குழந்தை தொழிலாளர் (அ) பாலியல் செயலுக்கு (அ) சமூக விரோத செயல்களுக்கு (அ) பிச்சையெடுக்கும் நிலைக்கு ஆளாகுதல்





# அத்தியாயம்


Efforts to Ensure Sustainable Promotion of Child Rights and
Education in Krishnagiri District, Tamil Nadu

# 3

# குழந்தை பாதுகாப்பிற்காக இயற்றப்பட்ட சட்டங்கள்

இந்திய மக்கள் அனைவருக்கும் சமூக, பொருளாதார, அரசியல் நீதி வழங்குவதும், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு சமதர்ம சமுதாயம் அமைப்பதும் இந்திய அரசியல் சாசனத்தின் முக்கிய நோக்கங்களாகும். இந்திய மண்ணில் பிறந்த அல்லது ஒரு இந்தியப் பிரஜைக்குப் பிறந்த எந்தவொரு குழந்தைக்கும் குடியுரிமை உண்டு என்று சாசனம் கூறுகிறது. அக்குழந்தைக்கும் அரசியல் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் அனைத்தும் உண்டு என்பது நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயமாகும். மேலும் குழந்தைகளுக்குத் தனிப் பாதுகாப்பு தேவை என்றும் ஆக்கிரமிப்பு, அதிகாரம், சுரண்டல் போன்ற தீய சக்திகளிலிருந்து குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று பாதுகாப்பு குறித்து பல கொள்கைகள் 1950ஆம் ஆண்டு எழுதப்பட்ட இந்திய அரசியல் சாசனத்தில் பிரதிபலிப்பதைக் காணலாம். குறிப்பாக, கொடுமைகளிலிருந்து பாதுகாக்கப்படுதலும், சமநீதி, சமுதாய சமத்துவம் போன்ற கருத்துக்கள் இந்திய அரசியல் சாசனத்தின் முக்கியமான பகுதியாக வழிகாட்டும் நெறிகளில் காணலாம்.

சட்டத்தின் முன் அனைவருக்கும் சம பாதுகாப்பு உண்டு. சாதி, இனம், பால், பிறப்பிடம் அல்லது வேறு எந்த காரணத்திற்காகவும் பாகுபாடு காட்டுவது கூடாது என்பதை சட்டம் வலியுறுத்தி கூறுகிறது. நம் சமுதாயத்தில் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் வாழ்கின்றனர். இந்த நிலை நீடிக்காமல் இருப்பதற்காகவே இந்திய அரசியல் சாசனம் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் விசேஷ சலுகை காட்டவும் சட்டங்கள் இயற்றவும் அரசாங்கத்திற்கு அனுமதி அளிக்கிறது.

குழந்தைகளை விற்பது, வாங்குவது, வற்புறுத்தி வேலை வாங்குவது, பிச்சை எடுக்கச் செய்வது, தவறாகப் பயன்படுத்துதல், ஆகியவற்றைத் தண்டிக்கப்பட வேண்டிய குற்றங்களாகக் கருத வேண்டுமென்று சட்டம் சொல்கிறது.

குழந்தைகள் சுதந்திரமான சூழ்நிலையில் கண்ணியத்தோடு வளர்வதற்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். இளைஞர்கள், சுரண்டப்படுவதில் இருந்தும் ஒழுக்கம் மற்றும் பொருளாதாரம் காரணமாக நிராதரவாக விடப்படுவதில் இருந்தும், காப்பாற்றப்பட வேண்டும் என்று சட்டத்தின் கோட்பாடுகள் சொல்கின்றன.

1992ம் ஆண்டு குழந்தை உரிமைகள் உடன்படிக்கை ஏற்றுக்கொண்ட பிறகு பல சட்டங்கள் திருத்தி இயற்றப்பட்டதுடன் சில சட்டங்கள் புதிதாகவும் இயற்றப்பட்டன. இச்சட்டங்கள் பற்றி பின்வருவனவற்றில் காணலாம்.

## 3.1 இளைஞர் நீதி (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 (Juvenile Justice (Care & Protection of Children) Act, 2015)

### தோற்றம்:




இளைஞர் நீதி சட்டம் 1986ல் கொண்டுவரப்பட்டது. இந்திய அரசு சர்வதேச குழந்தை உரிமைகள் சாசனம் கையெழுத்திட்ட பிறகு மாற்றப்பட்ட முக்கியமான சட்டங்களில் இளைஞர் நீதிச் சட்டம் ஒன்றாகும். திருத்தி அமைக்கும் வகையில் 2000ம் ஆண்டு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. இருப்பினும் 2006ம் ஆண்டில் இச்சட்டத்தில் சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டது. 2015ம் ஆண்டு நிறைய மாற்றங்களுடன் இளைஞர் நீதி (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015 என்று கொண்டுவரப்பட்டது. தற்பொழுது இச்சட்டம் அமுலில் உள்ளது.

இச்சட்டப்படி குழந்தைகள் என்பவர் 18 வயது நிரம்பாத அனைவரும் ஆவர்.

### நோக்கம்:

பராமரிப்பு பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரண்பட்ட ஆகிய இருதரப்புக் குழந்தைகளின் நலன், பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு, அவர்களை கையாள வேண்டிய முறை, மற்றும் இவர்களுக்கு உரிய உரிமைகள் அனைத்தும் கிடைப்பதற்கு வழிவகை செய்வதே இச்சட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இச்சட்டம் குழந்தைகளை இரு பிரிவுகளாக உள்ளடக்கி இயற்றப்பட்டுள்ளது.

**இளைஞர் நீதி (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம்**

- பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளைக் கவனிப்பதற்கும் அவர்களின் மறுவாழ்விற்கும் ஏற்ற முடிவுகளை எடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பு குழந்தைகள் நலக் குழுமம்.
- குற்றம் புரிந்ததாகக் கருதப்படும் குழந்தைகளைக் கவனிக்க வேண்டிய விதிகளை இளைஞர் நீதி குழும அமைப்பின் மூலமாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த இரண்டு அமைப்பைப் பற்றி அத்தியாயம் 4ல் கூறப்பட்டுள்ளது.

## இளைஞர் நீதி (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015ன் முக்கிய அம்சங்கள்

- குழந்தையின் மறுவாழ்விற்கும், பாதுகாப்பிற்கும் முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது.
- கொடும் குற்றம் புரிந்த குழந்தைகள் 16 - 18 வயதிற்குட்பட்டிருந்தால் அவர்களை கையாளுவதற்கு தனி விதிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளது.
- பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கான பராமரிப்பு இல்லங்களை முறையாக அரசிடம் இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இவ்வில்லங்கள் நடைப்பெறுவதற்கான வரைமுறைகளையும் கோடிட்டு காட்டப்பட்டுள்ளது.
- இல்ல பராமரிப்பு தவிர குழந்தைகளைக் குடும்பங்களில் வைத்து பராமரிப்பதற்கு முன்னுரிமை தரப்பட்டுள்ளது. அதன்படி துன்புறும் சூழலில் வாழும் குழந்தைகளுக்குத் தத்துக்கொடுத்தல் (Adoption), மாற்று குடும்ப பராமரிப்பு (Foster Care) மற்றும் படிப்பதற்கான கல்வி உதவித் தொகை (Sponsorship) அளித்தல் ஆகிய மூன்று வழிகளுக்கும் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.
- குழந்தையைத் தன் பாதுகாப்பில் வைத்திருக்கும் நபர் அக்குழந்தையை அடித்து துன்புறுத்துதல் (அ) புறக்கணித்தல் (அ) பிச்சை எடுக்க வைத்தல் (அ) பிச்சை எடுப்பதற்காக உடல் உறுப்புகளை ஊனமாக்குதல் (அ) சமூக விரோத செயல்களில் ஈடுபடச் செய்தல் (அ) வன்கொடுமைக்கு ஆளாக்கல் (அ) இத்தகைய கொடுமையை செய்வதற்கு பிறரை ஏவிவிடுதல் ஆகியவற்றிற்கு சிறை தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.
- புறக்கணித்த (அ) கைவிடப்பட்ட (அ) வன்கொடுமைக்கு ஆளான குழந்தையை கையகப்படுத்தும் நபர்கள் (தனி, நிறுவனம், மருத்துவமனை சார்ந்தோர்) 24 மணி நேரத்திற்குள் குழந்தைகள் பாதுகாப்பின் அமைப்பான சைல்டு லைன், காவல் துறை, குழந்தை நல குழுமம், இச்சட்டத்தின் கீழ் அங்கீகாரம் பெற்ற குழந்தை இல்லம் இதில் யார் ஒருவருக்கேனும் உடனடியாக தகவல் அளிக்க வேண்டும். குழந்தையை மீட்கப்பட்ட தகவலை அளிக்காத பட்சத்தில் குழந்தையை கையகப்படுத்தியவருக்கு சிறை தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.



## 3.2 பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012 (Protection of Children from Sexual Offences Act (POCSO), 2012)

### தோற்றம்:




இச்சட்டம் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் குறித்து முதன் முதலில் இயற்றப்பட்ட சிறப்பு சட்டமாகும். இச்சட்டத்தில் குழந்தை என்பவர் 18 வயதுக்குட்பட்டவர் - பாதிக்கப்பட்ட குழந்தை ஒரு பெண்ணாக, அல்லது ஆணாக அல்லது திருநங்கையாக இருக்கலாம்.

இச்சட்டம் முதன் முதலாக பாலியல் வன்முறை என்றால் என்ன என்று வரையறுத்துக் கூறுகிறது. அதன்படி உடலுறவு கொள்வது தவிர, பின்தொடருதல், தகாத இடங்களில் தொடுதல், ஆபாசமான படங்களைக் காண்பித்தல் அல்லது தொலைதொடர்பு சாதனங்கள் மூலம் அனுப்புதல் போன்ற அனைத்துச் செயல்களும் பாலியல் வன்முறையாகக் கருதப்பட்டுள்ளது.

### இச்சட்டத்தின்படி பாலியல் குற்றம் என்பது

- உட்புகுத்தி பாலியல் தாக்குதல்
- கடுமையான உட்புகுத்தி பாலியல் தாக்குதல்
- பாலியல் தாக்குதல்
- கடுமையான பாலியல் தாக்குதல்
- பாலியல் துன்புறுத்தல்
- கிளர்ச்சியைத் தூண்டுகிற ஆபாச பாலியல் செயல்களுக்காக குழந்தைகளை பயன்படுத்துதல்
- குழந்தையை ஈடுபடுத்த கிளர்ச்சியைத் தூண்டுகிற ஆபாச பாலியல் செயல் உள்ள படங்கள் /வீடியோ சேகரித்து வைத்திருத்தல் ஆகியவை ஆகும்.

மேற்கண்ட குற்றங்களின் விசாரணைக்காக சிறப்பு நீதிமன்றங்களை அமைத்தல் என்பதை இச்சட்டம் கூறுகிறது.

இச்சட்டம் குழந்தைகளின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களது உரிமைகளைப் பாதுகாக்கும் ஒரு சிறப்பு குற்றவியல் சட்டமாகும்.

தண்டனை: குற்றத்திற்குத் தக்கவாறு சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டுமே விதிக்கப்படும்.

## 3.3 ஒழுக்க நெறி பிறழ்தல் சட்டம், 1956 (Immoral Traffic (Prevention) Act, 1956)

### தோற்றம்:

இச்சட்டம் 1956ல் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளைச் சட்டத்துக்குப் புறம்பாக கடத்துதலைக் கட்டுப்படுத்தும் சட்டம் என்று அழைக்கப்பட்டது. பின்னர் 26ம் தேதி ஜனவரி மாதம் 1987ம் ஆண்டு இச்சட்டத்தினை ஒழுக்க நெறி பிறழ்தல் சட்டம் 1956 என்று மாற்றப்பட்டது. இச்சட்டத்தில் பெண் மற்றும் குழந்தைகள் (ஆண் / பெண்) அனைவரும் உள்ளடங்குவர்.

### நோக்கம்:

இச்சட்டம் மனிதர்களைக் கடத்துவதிலிருந்து பாதுகாப்பதே ஆகும். மேலும் விபச்சாரத்திற்காகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுவதை முற்றிலும் தடுப்பதே இச்சட்டத்தின் முக்கியமான நோக்கம் ஆகும்.

### இந்திய தண்டனைச் சட்டத்தின்படி

- உரிமை பெற்ற பாதுகாவலரிடமிருந்து 16 வயதுக்குட்பட்ட பெண், 18 வயதுக்குட்பட்ட ஆண் ஆகியோரை உள்நாட்டிலோ, வெளி நாட்டிலோ கடத்திச் செல்லுதல் - 263 விதிப்படி குற்றமாகும்.
- பிச்சை எடுக்க பயன்படுத்தும் நோக்கத்துடன் ஒரு குழந்தையைக் கடத்துவது அல்லது பாதுகாவலரிடமிருந்து பெறுவது – 363 ஏ பிரிவில் குற்றமாகும்.
- பிச்சையெடுக்கும் நோக்கத்துடன் ஒரு குழந்தையை ஊனமாக்குதல் - 363 ஏ (2) பிரிவின்படி குற்றமாகும்.
- பெண்கள் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுவது கோட்பாடு 23ன் படி குற்றமாகும்.

### தண்டனை:

ஒழுக்க நெறி பிறழ்தல் தடைச் சட்டம் பிரிவு 5ன் படி குழந்தைகளை விபச்சாரத்திற்குக் கடத்துதல் மற்றும் விபச்சார தொழிலில் ஈடுபடுத்துதலுக்கு 7 வருடம் முதல் 14 வருடங்கள் வரை சிறை தண்டனை விதிக்கப்படும்.

## 3.4 குழந்தைத் தொழிலாளர் (தடுப்பு மற்றும் முறைப்படுத்துதல்) திருத்தப்பட்ட சட்டம், 2016 – (Child Labour (Prohibition & Regulation) Amendment Act, 2016)



குழந்தைத் தொழிலாளர் (தடுப்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் முதன் முதலில் 1986ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்தில் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகள் அமைப்புச் சார்ந்த தொழில்களில் ஈடுபடுவதை மட்டுமே தடை செய்கிறது. தடை செய்யப்படாத தொழில்களில் குழந்தைகள் வேலை செய்யும்போது 5 மணி நேர வேலையும் இடையில் 1 மணி நேர ஓய்வும் கொடுக்கப்பட வேண்டும். இரவு 7 மணி முதல் காலை 8 மணி வரை உள்ளிட்ட இடைப்பட்ட நேரத்தில் எந்தக் குழந்தையும் வேலைக்கு அமர்த்தப்படக்கூடாது.

இது வரை அமுலில் இருந்த இச்சட்டத்தில் மத்திய அரசால் பல மாற்றங்கள் கொண்டு வரப்பட்டு 29ம் தேதி ஜுலை மாதம் 2016ம் ஆண்டு குழந்தை தொழிலாளர் (தடுப்பு மற்றும் முறைப்படுத்துதல்) திருத்தப்பட்ட சட்டம் 2016 என்று கொண்டுவரப்பட்டது.

குழந்தை என்பவர் 14 வயது அல்லது இலவச கட்டாயக் கல்வி உரிமை சட்டம் 2009ல் குறிப்பிட்டுள்ள உச்ச வயது வரம்பு கொண்டவரை குழந்தை என இச்சட்டம் குறிப்பிடுகிறது.

இச்சட்டத்தில் கொண்டுவரப்பட்டுள்ள முக்கியமான மாற்றங்கள்:

- 14 வயது நிரம்பாத குழந்தைகள் எந்த வகையான வேலையிலும் பகுதி நேர அல்லது முழு நேர பணியாளர்களாக வேலைக்கு அமர்த்தப்படுவதை முற்றிலும் தடை செய்கிறது.
- வளர் இளம் பருவத்தினரை (15 – 18 வயது) அபாயகரமான எவ்விதத் தொழில் துறையிலும் வேலைக்கு அமர்த்தப்படுவதைத் தடை செய்வதுடன் மற்ற பணியிடங்களில் வேலைக்கு அமர்த்தப்படும்போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளை வலியுறுத்துகிறது.
- குடும்பத் தொழிலில் குடும்ப அங்கத்தினருக்கு உதவிகரமாக பள்ளி நேரம் தவிர்த்து வேலை செய்யலாம். பள்ளிப் படிப்பிற்கு இடையூறு இல்லாத வகையில் கலைத் துறை, விளம்பரம், திரைத் துறை, தொலைக்காட்சி தொடர் நிகழ்ச்சிகள், இதர பொழுது போக்கு மற்றும் விளையாட்டுத் துறை ஆகியவற்றில் சட்டத்தின் விதிமுறைகளைப் பின்பற்றி குழந்தைகளை ஈடுபடுத்துவதற்கு அனுமதி உண்டு. சர்க்கஸ் விளையாட்டில் மட்டும் குழந்தையை ஈடுபடுத்த அனுமதி இல்லை.

### தண்டனை:

குற்றத்திற்குத் தக்கவாறு சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டுமே விதிக்கப்படும்.

## குழந்தைத் தொழிலாளர் முறையை தடுப்பதற்கான பிற சட்டங்கள்

3.4.1 தொழிற்சாலை சட்டம், 1948 (The Factories Act, 1948) – 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவதை தடை செய்கிறது.

3.4.2 சுரங்க சட்டம், 1952 – சுரங்கத்திற்குள் வேலை செய்ய 18 வயது நிரம்பியவர்களுக்கே அனுமதியுண்டு.

3.4.3 பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர் சட்டம், 1966 (The Beedi of Cigar Workers (Conditions of Employment) Act, 1956) – 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை பீடி மற்றும் சுருட்டு தொழிலில் ஈபடுபவதை தடை செய்கிறது.

3.4.4 குழந்தைகள் (உழைப்பு அடமான) சட்டம், 1933 – குழந்தைகளின் உழைப்பை அடமானம் வைத்து செய்து கொள்ளும் ஒப்பந்தத்திற்கு தடை விதிக்கிறது.

3.4.5 கொத்தடிமை முறை ஒழிப்பு சட்டம், 1976 (The Bonded Labour (Abolition) Act, 1976) – குழந்தை உழைப்புக்கு முன் பணம் கொடுப்பவரை தண்டனைக்குட்படுத்த முடியும். மேலும் கொத்தடிமையாக வேலை செய்யும் குழந்தைகளை மீட்கவும் முடியும்



## 3.5 குழந்தைத் திருமணத் தடைச் சட்டம், 2006 (Child Marriage Prohibition Act, 2006)

### தோற்றம்:

1929ம் ஆண்டு ஆங்கிலேயே அரசு குழந்தைத் திருமணத்தைத் தடை செய்தது. இந்தச் சட்டம் சாரதா சட்டம் என்று பரவலாகக் கூறப்பட்டது. இந்த சட்டம் பெண்களின் திருமண வயது 15 எனவும் ஆண்களின் திருமண வயது 18 எனவும் நிர்ணயித்தது. இச்சட்டம் 1978ம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்டது. இதில் பெண்ணிற்கு திருமண வயது 18 எனவும், ஆணிற்கு திருமண வயது 21 எனவும் நிர்ணயித்தது. இச்சட்டம் சரிவர அமுலாக்கப்படாததால் குழந்தைத் திருமணங்கள் பரவலாக நடைப்பெற்றுக் கொண்டிருந்தன.

பின்னர் குழந்தைத் திருமணங்களை முற்றிலும் தடை செய்வதற்காக 2006ல் குழந்தைத் திருமண தடைச் சட்டம் (2006) இயற்றப்பட்டு, நவம்பர் 2007 முதல் நடைமுறைக்கு வந்தது.



இச்சட்டம் குழந்தைத் திருமணத்தைத் தடை செய்வதுடன் குழந்தைத் திருமணத்தை நடத்துபவர்களுக்கும், துணை புரிவோருக்கும் தண்டனைகளைக் கடுமையாக்கியுள்ளது.

இச்சட்டத்தின் கீழ் தமிழக அரசு குழந்தைத் திருமணத் தடுப்பு சட்டம் நடைமுறைப் படுத்தப்படுவதற்கான விதிகளை 2007ஆம் ஆண்டு வெளியிட்டது.

இச்சட்டம் மூன்று விதமான ஷரத்துக்களை உள்ளடக்கியது.

1. குழந்தைத் திருமணத்தைத் தடுத்தல்
2. குழந்தைத் திருமணத்திலிருந்து மீட்கப்பட்ட குழந்தைக்கு தேவையான பாதுகாப்பு அளித்தல்
3. சட்டப்படி நடவடிக்கை எடுத்தல்

குழந்தைத் திருமணத் தடைச் சட்டத்தின் படி
பெண்ணின் திருமண வயது - 18 (பூர்த்தியடைதல்)
ஆணின் திருமண வயது - 21 (பூர்த்தியடைதல்)

**குழந்தைத் திருமணத்தைத் தடுப்பதற்கான அதிகாரம் கொண்டவர்கள்**

1. மாவட்ட சமூக நல அலுவலர் - குழந்தைத் திருமணத் தடை அலுவலர்
2. முதன்மை மாவட்ட நீதிபதி
3. மாவட்ட ஆட்சியாளர்
4. முதலாம் வகுப்பு நீதித்துறை நடுவர்
5. பெருநகர முதலாம் நீதித்துறை நடுவர்
6. மாவட்ட நிர்வாக நடுவர்
7. காவல் துறை

## குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் 2006ன் படி குற்றம் செய்தவராகக் கருதப்படுவோர்

- குழந்தைத் திருமணத்தை நடத்திய இருதரப்பு பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் மற்றும் மணமகன்
- குழந்தைத் திருமணத்தை நடத்தி வைக்கும் புரோகிதர் / பூசாரி
- குழந்தைத் திருமணத்தில் கலந்துகொண்ட உறவினர்கள் / நண்பர்கள் / அண்டை வீட்டார் அனைவரும்
- குழந்தைத் திருமணத்தை நிச்சயித்த நபர்கள் / அமைப்புகள்
- திருமணத் தரகர்கள்

### தண்டனை

இரண்டு வருட கடுங்காவல் தண்டனை (அ) ரூபாய் ஒரு லட்சம் அபராதம் (அ), கடுங்காவல் தண்டனை மற்றும் அபராதம்



## 3.6 குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 (The Right of Children to Free and Compulsory Education Act, 2009)

### தோற்றம்:

2002ம் ஆண்டு பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட 93வது அரசியல் சட்டத் திருத்த மசோதாவின்படி 6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு இலவச கட்டாயக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்று ஒரு பரிந்துரையாக சொல்லப்பட்ட கொள்கையாக இருந்தது. பின்னர் 26ம் தேதி ஆகஸ்ட் 2009ம் ஆண்டு மத்திய அரசால் குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 என கொண்டுவரப்பட்டது.

### நோக்கம்:

இச்சட்டத்தின் முக்கிய நோக்கமானது 6 வயது முதல் 14 வயது வரையுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் இலவச கட்டாயக் கல்வி அளிப்பது மற்றும் கல்வி கிடைக்க வழி வகை செய்வதும் ஆகும்.

### இச்சட்டத்தின் முக்கிய அம்சங்கள்:

- 6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகள் அனைவருக்கும் தொடக்கக் கல்வி முடியும் வரை கல்வி அளித்தல்
- தொடக்கக் கல்வி பெறாத 6 முதல் 14 வயதுள்ள குழந்தைகளை இனங்கண்டு அவர்களின் வயதிற்கேற்ற வகுப்பில் சேர்த்தல். இக்குழந்தைகள் அந்த வகுப்பிற்கான கல்வி தகுதிகளை வளர்த்துகொள்வதற்கான சிறப்பு வகுப்புகளை நடத்துதல்
- ஒவ்வொரு தனியார் பள்ளியிலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய குழந்தைகளின் சேர்க்கைக்கான அனுமதியை 25% ஒதுக்குதல்
- பள்ளி மேலாண்மைக் குழுவை அமைத்தல் - 75% உறுப்பினர்களின் குழந்தைகள் பள்ளியில் படிக்கும் குழந்தைகளின் பெற்றோராக இருக்க வேண்டும்.
- அரசு அல்லது உள்ளாட்சி நிர்வாகத்தால் நடத்தப்படும் பள்ளியில் தொடக்கக் கல்வி முடித்திட வழி இல்லாத நிலையில் அக்குழந்தை வேறு பள்ளிக்கு மாற்றம் கோருதல் அல்லது வெளி ஊர்களுக்கு சென்று பயில்வதற்கு உரிமை உண்டு.



## 3.7 கருவின் நிலைப்பாட்டை கண்டறியும் நுணுக்க முறை (தவறாக பயன்படுத்துவதை கட்டுப்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1994 (Pre-Natal Diagnostic Techniques (Regulation and Prevention of Misuse) Act, 1994

- பெண் சிசுவை அழிக்கும் நோக்குடன் கருவில் உள்ள சிசு ஆணா / பெண்ணா என கண்டறிதலை இச்சட்டம் தடுக்கிறது.

  அமுலில் இருக்கும் இதர இந்திய சட்டங்களையும் சட்ட பிரிவுகளையும் குழந்தைகளுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களை தடுக்க பயன்படுத்தலாம்.

  இந்திய குற்றவியல் சட்ட பிரிவுகள் 312 முதல் 318 வரை கீழ்காணும் செயல்கள் குற்றம் என குறிப்பிட்டுள்ளது

- பெண் கருவை அழிப்பது
- குழந்தை உயிருடன் பிறக்கத் தடையாய் இருப்பது
- குழந்தை பிறப்பை மறைத்து குழந்தையின் உடலை ரகசியமாக புதைப்பது

## 3.8 எச்.ஐ.வி / எய்ட்ஸ் (தடுப்பு மற்றும் கட்டுப்படுத்துதல்) சட்டம், 2017 (The Human Immunodeficiency Virus and Acquired Immune Deficiency Syndrome (Prevention and Control) Act, 2017

**தோற்றம்:**

எச்.ஐ.வி தொற்று நோய் உள்ள மற்றும் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் நலனிற்காக மத்திய அரசின் சட்டம் மற்றும் நீதித்துறை 2017ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஒரு கொள்கையை கொண்டு வந்தது. இக்கொள்கையின் முக்கிய நோக்கம் எச்.ஐ.வி தொற்று நோயின் களங்கம் மற்றும் பாகுபாடு பார்த்தலை நீக்குதல் ஆகும்.

**நோக்கம்:**

- மருத்துவம், சுகாதாரம் மற்றும் உளவியலுக்கான உதவி அளித்தல்
- எச்.ஐ.வி நோயுள்ள குழந்தைகளைப் பாகுபடுத்துவதிலிருந்து பாதுகாத்தல்
- எச்.ஐ.வி நோயுள்ள குழந்தைகளைப் பள்ளியில் அனுமதித்து கல்வி கற்கச் செய்தல்

**எச்.ஐ.வி / எய்ட்ஸ் இலவச தொலைபேசி எண் 1097**

## 3.9 மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளுக்கான சட்டம், 2016 (The Rights of Persons with Disabilities Act, 2016)

**தோற்றம்:**

நடைமுறையில் இருந்து வந்த மாற்றுத் திறனாளிகளுக்கான சட்டம், 1995யை மாற்றி மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளுக்கான சட்டம், 2016 என்று டிசம்பர் மாதம் 28ம் தேதி 2016ம் ஆண்டு மத்திய அரசின் சட்டம் மற்றும் நீதித் துறையால் கொண்டுவரப்பட்டது.

இச்சட்டத்தில் மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளை மேம்படுத்துவதற்கான சில கொள்கைகளை வகுத்துள்ளது.

1. உள்ளார்ந்த கௌரவத்திற்கு மரியாதை அளித்தல், சுயமாக முடிவெடுத்தலுக்கும், சுதந்திரமாக செயல்படுவதற்கும் வாய்ப்பு அளித்தல்
2. பாகுபடுத்தாமை
3. சமுதாயத்தில் முழுமையாகவும், திறமையுடனும் பங்கேற்க செய்தல்
4. வேறுபாடில்லாமல் மரியாதை அளித்தல் மற்றும் மனித நேயத்துடன் நடத்துதல்
5. சமமான வேலைவாய்ப்பு அளித்தல்
6. அணுகுமுறை
7. பெண்கள் மற்றும் ஆண்களுக்கிடையே சமத்துவம்
8. மாற்றுத் திறனாளி குழந்தைகளின் வளர்ச்சியை மேம்படுத்துதல், அவர்களின் உரிமைகளுக்கு மதிப்பு அளித்தல் மற்றும் அவர்களைப் பாதுகாத்தல்



# அத்தியாயம்



# 4

# குழந்தையின் நலனைப் பேணி காப்பதற்கான சமுதாய பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் பிரதிநிதிகளின் கடமைகள்

பெரும்பாலும் குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பில் உள்ளவர்களே அவர்களுக்கு எதிரான குற்றங்களை புரிய முனைகின்றனர். குழந்தைகள் துன்புறுத்தப்படுவதைத் தடுப்பது சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு நபரின் கடமையாகும். மேலும் குழந்தைகளைப் பாதுகாத்து அவர்களுடைய வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் ஏற்ற ஒரு சூழலை உருவாக்கித் தருவது நம் ஒவ்வொருவரின் கடமை மட்டுமல்ல அரசாங்கத்தின் கடமையும் ஆகும். குழந்தைகளின் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், பிரச்சனைகளை எதிர்கொள்ள பொறுப்புணர்ச்சியைத் தூண்டவும், குழந்தை பாதுகாப்பு மீறலைத் தடுக்கவும் குறைப்பாடுகளைத் தீர்த்து குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான பாதுகாப்பு சூழலை உருவாக்குவதற்கும் சில பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் திட்டங்களை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. இந்த திட்டங்களை சில தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுத்தப்படுகின்றன. இந்த திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுவதற்கு மாநில உயர்மட்ட அளவிலிருந்து கிராமங்கள் வரை குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதில் முதன்மையான பாதுகாப்பு திட்டமாக ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டம் விளங்குகிறது.

## 4.1 ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டம்:

### தோற்றம்:

குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் நலனிற்கான திட்டங்கள் பல உள்ளன. ஆனால் இத்திட்டங்கள் அனைத்தும் தன்னிச்சையாகவும், ஒருங்கிணைப்பு இல்லாமலும், இடைவெளியுடனும் செயல்பட்டு வந்தன. குழந்தைகளின் நலனுக்காக செயல்படும் அனைத்து பாதுகாப்பு திட்டங்களையும் ஒருங்கிணைத்து, இடைவெளிகளை நிரப்பி குழந்தைகளின் உரிமைகளை மேம்படுத்துவதற்கான ஒரு பாதுகாப்பு வளையமாக ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டம் ஜூன் 2009ம் ஆண்டு மத்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டுத் துறையினால் கொண்டுவரப்பட்டது. மாநிலங்களில் சமூக பாதுகாப்புத் துறை மற்றும் சமூக நலத்துறை மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகிறது.



## கொள்கை:

இத்திட்டத்தின் அடிப்படை கொள்கையாக விளங்குவது “குழந்தையின் பாதுகாப்பு உரிமை” மற்றும் “குழந்தையின் சிறந்த நலன்” ஆகும். பலதரப்பட்ட குழந்தைகளின் பாதுகாப்பு திட்டங்கள் அனைத்தையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவந்து ஒரு பாதுகாப்பு வளையமாக செயல்படுத்துவதன் மூலமே இக்கொள்கையை நிறைவேற்ற முடியும். .

## இலட்சியம்:

- இளைஞர் நீதி (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தினை திறம்பட செயல்படுத்துதல்
- சமுதாயத்தில் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்
- புறக்கணித்தல், சுரண்டல், வன்கொடுமை, குழந்தையைக் கைவிடுதல் அல்லது பெற்றோரிடமிருந்து குழந்தையைப் பிரித்தல் போன்ற செயல்களால் குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைத்தல்

## நோக்கம்:

- குழந்தைகளின் பாதுகாப்பிற்கான செயல்கள் மற்றும் திட்டங்களைத் தரமான முறையில் மேம்படுத்துதல்
- இந்தியாவில் குழந்தைகளின் தற்போதைய நிலை மற்றும் குழந்தைகளின் உரிமைகளுக்கான பொது விழிப்புணர்வை மேம்படுத்துதல்
- குழந்தையின் பாதுகாப்பில் கடமை மற்றும் பொறுப்புடைமையுடன் செயல்படுதல்
- குழந்தைகளுக்குச் சட்ட ரீதியான மற்றும் பாதுகாப்பு சேவைகளை வழங்க அனைத்து நிலைகளிலும் ஒரு அமைப்பை உருவாக்குதல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல்
- அனைத்து நிலைகளிலும் பொருத்தமான துறை சார்ந்த செயல்களை உறுதிப்படுத்துதல்

## ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் நிர்வாக அமைப்பு

மத்திய அமைச்சகத்தின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை

↓

மாநில குழந்தை பாதுகாப்பு சங்கம்
செயலாளர், சமூக நலத் துறை அவர்களின் தலைமையில்

↓

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம்
மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில்

↓

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு

↓

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்

↓

- பாதுகாப்பு அலுவலர் நிறுவனம் சார்ந்த (Institutional Care)
- பாதுகாப்பு அலுவலர் நிறுவனம் சாரா (Non Institutional Care)

↓

ஆற்றுப்படுத்தனர், சமூக பணியாளர் மற்றும் புறத்தொடர்பு பணியாளர்கள்.

**தேசிய அளவில் குழந்தைகள் பாதுகாப்பை ஒருங்கிணைக்கும் நிறுவனங்கள்**

- மத்திய திட்ட செயலாக்க அலகு (Central Project Support Unit - CPSU)
- மத்திய தத்துவள முகமை (Central Adoption Resource Authority - CARA)
- குழந்தை வளர்ப்பிற்க்கான பொது கூட்டுறவு நிறுவனம் (National Institute for Public Co-operation & Child Development - NIPCCD)

குழந்தை பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக உள்ள அனைத்து பிரச்சனைகளையும் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

## 4.1.1 தேசிய குழந்தை பாதுகாப்பு உரிமை ஆணையம்:

குழந்தை பாதுகாப்பு உரிமைகளுக்கான தேசிய ஆணையத்தின் தத்துவமானது நாட்டில் உள்ள குழந்தை உரிமை மீறல்கள், குழந்தை பாதுகாப்பு மற்றும் குழந்தைத் தொடர்பான அனைத்து கொள்கைகளை அங்கீகரிப்பதுடன் அவற்றை வலியுறுத்தி செயல்படுத்துவதே ஆகும். மேலும் பாதிக்கப்பட்ட குழந்தைகளைப் பாதுகாக்கும் திட்டங்களில் தொய்வு ஏற்படும்பொழுது அல்லது இடைவெளி ஏற்படும்பொழுது அதனை நீக்கி சிறப்பாக செயல்பட வைப்பது இதன் முக்கிய இலக்காக அமைந்துள்ளது.

இந்த ஆணையம் 18 வயதிற்குட்ப்பட்ட அனைத்து குழந்தைகளின் பாதுகாப்பிற்கு சமமான முக்கியத்துவம் அளிக்கிறது. மிகவும் பின்தங்கிய மற்றும் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் நலனிற்கு முன்னுரிமை வழங்குகிறது. இதன் அடிப்படையிலேயே ஒவ்வொரு மாநிலத்திலும் குழந்தை பாதுகாப்பு உரிமைகளுக்கான மாநில ஆணையம் செயல்படுகிறது.

வன்கொடுமைக்கு ஆளான குழந்தையோ அல்லது அக்குழந்தையை கண்ட நபரோ நேரடியாக இக்குழுமத்தை அணுகலாம்.

## 4.1.2 மாநில குழந்தை பாதுகாப்பு உரிமை ஆணையம்



ஒவ்வொரு மாநிலத்திலும் குழந்தைகளின் உரிமை மற்றும் குழந்தை பாதுகாப்பிற்கும் குழந்தை உரிமை பாதுகாப்பு ஆணையங்களின் சட்டம், 2005ன்படி மாநில குழந்தை பாதுகாப்பு ஆணையம் நிறுவப்பட்டது. இந்த மாநில ஆணையத்தில் ஒரு தலைவர் மற்றும் ஆறு உறுப்பினர்கள் உள்ளனர்.

### பணிகள்

- குழந்தை உரிமை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான சட்டம் மற்றும் அரசியலமைப்பைப் பரிசீலிப்பது
- குழந்தையின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை மாநில அரசுக்கு வழங்குதல்
- குழந்தை உரிமை மீறல்கள் குறித்து விசாரித்தல்
- பயங்கரவாதம், இனவாத வன்முறை, இயற்கை பேரழிவுகள், உள்நாட்டு வன்முறை, எச்.ஐ.வி / எய்ட்ஸ், கடத்தல், உடல், மன மற்றும் பாலியல் துன்புறுத்தல், சுரண்டல் போன்ற குழந்தைகளுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய காரணிகளை ஆய்வு செய்தல்
- கொடுமைக்குள்ளான மற்றும் பின்தங்கிய நிலையிலிருந்து வரும் குழந்தைகளுக்கான சிறப்பு பாதுகாப்பை ஏற்படுத்துதல்
- குழந்தை உரிமை ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல்
- குழந்தை உரிமைகள் மீதான ஆராய்ச்சி செய்தல்
- குழந்தை உரிமை பற்றிய விழிப்புணர்வை பல வழிகளில் ஏற்படுத்துதல்
- குழந்தைகளுக்கான இல்லம் மற்றும் கூர்நோக்கு இல்லங்களை ஆய்வு செய்தல்
- மனித உரிமை மீறல்களுக்கு எதிரான செயல்களை தடுப்பதுடன் ஆய்வு செய்தல்

## 4.1.3 மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு



தமிழ் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் இத்தகு பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இதன் முக்கியப் பணியானது அம்மாவட்டத்தில் நடைபெறும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறை மற்றும் கடத்தல் உள்ளிட்ட அனைத்து உரிமை மீறல்களைத் தடுத்து பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குத் தேவையான மறுவாழ்வு அளித்தல் ஆகும்.

இந்த பாதுகாப்பு அலகின் பொறுப்பாளர் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் ஆவார். குழந்தை பாதுகாப்பு அலுவலரின் பொறுப்பானது அரசு மற்றும் அரசு அங்கீகரிக்கப்பட்ட குழந்தைகள் இல்லங்களை மேற்பார்வை செய்தல், அங்கீகரிக்கப்படாத குழந்தைகள் இல்லங்கள் செயல்படுவதை தடுத்து அங்கிருக்கும் குழந்தைகளை அங்கீகரிக்கப்பட்ட இல்லங்களுக்கு மாற்றியமைத்தல், பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கு தேவையின் அடிப்படையில் மறுவாழ்வு அளிப்பதற்கான செயல்களை மேற்கொள்ளுதல், வன்கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்ட குழந்தைகளுக்குச் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் குழந்தைகளின் நலன் சார்ந்த அனைத்து தளங்களிலும் பணி செய்வது ஆகும்.

## 4.2 குழந்தை நலக் குழுமம்:



குடும்ப பராமரிப்பு கிடைக்காமல் விடப்பட்ட, பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளின் மறுவாழ்விற்கு ஏற்பாடு செய்யும் பொறுப்பு இக்குழுமத்தை சார்ந்தது என இளைஞர் நீதி சட்டம் கூறியுள்ளது. இதன்படி பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தையின் பின்னணியை ஆய்வு செய்து அக்குழந்தைக்கேற்ற சிறந்த செயல்பாடுகள் இக்குழுமத்தால் பரிந்துரைக்கப்படுகிறது.

### உறுப்பினர்கள்:

தலைவரும், நான்கு அங்கத்தினர்களும் இந்த குழுமத்தில் உறுப்பினர்களாக இருப்பர். இதில் ஒருவர் குழந்தைகள் நலனில் நிபுணத்துவம் பெற்றவராகவும், ஒருவர் பெண்ணாகவும் இருத்தல் அவசியமாகும்.

பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளை இனங்கண்டு குழுமத்தின் முன் ஒப்படைப்பதற்கு பொறுப்பு உள்ள நபர்கள்

- காவல் துறை அதிகாரிகள்
- அரசு அலுவலர்கள் / பொது ஊழியர்கள்
- சைல்டு லைன் அமைப்பை சார்ந்தவர்கள்
- அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவன சமூக சேவகர்கள்
- சமூக நலனில் அக்கறையுள்ள தனிநபர்கள்

## 4.3 இளைஞர் நீதிக் குழுமம்




சட்டத்திற்கு புறம்பாக செயல்படும் குழந்தைகள் அதாவது சமூக விரோத செயல்களில் ஈடுபட்டிருக்கும் குழந்தைகளின் உரிமைகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் அவர்களைத் தனி கவனத்துடன் சட்ட ரீதியாக கையாளுவதற்கு இளைஞர் நீதி சட்டத்தின் கீழ் இக்குழுமம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

குற்றம் புரிந்ததாக கருதப்படும் இக்குழந்தைகளின் மறுவாழ்விற்கு திட்டமிடலும், மறுமுறை குற்றச்செயலில் ஈடுபடாவண்ணம் தகுந்த சீரமைப்பு வழிகளைப் பரிந்துரை செய்வதும் இக்குழுமத்தின் நோக்கமாகும். (மருத்துவ வசதி, ஆலோசனை வழங்குதல், கல்வி வழங்குதல், போன்றவை இக்குழுமம் மூலம் செயல்படுத்தப்படுகிறது)

18 வயது நிரம்பாத நபர் அல்லது குழந்தை எத்தகைய குற்றம் செய்திருந்தாலும் இளைஞர் நீதி சட்டத்தில் கூறியுள்ளபடி இளைஞர் நீதி குழுமத்திடம் மட்டுமே ஒப்படைக்கப்பட வேண்டும். குழந்தை தன் கருத்தை அச்சமின்றி சொல்லும் வகையில், நீதிமன்றத்திற்குண்டான கெடுபிடிகள் ஏதுமின்றி குழுமத்தின் நடவடிக்கைகள் எளிமையான முறையில் இருக்கும்.

மேலும் குற்றம் புரிந்ததாகக் கருதப்படும் குழந்தைகளின் பின்னணியை ஆய்வு செய்யும் நன்னடத்தை அலுவலரின் அறிக்கை மற்றும் குழந்தையிடம் விசாரித்து பெறும் தகவல்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

குற்றம் நிருபிக்கப்படும் பட்சத்தில், அந்த குழந்தை மனம் திருந்தி மறுவாழ்வு வாழ்வதற்கான சூழ்நிலை ஏற்படும் வண்ணம் தண்டனை அமையும். குழந்தையின் எதிர்காலத்தை கருதி குற்ற பின்னணி தண்டனை காலம் முடிந்தவுடன் அழிக்கப்பட்டுவிடும்.

### உறுப்பினர்கள்:

இக்குழுமம் மூன்று நபர்களைக் கொண்டதாகும். இக்குழுமத்தின் தலைவராக நீதித்துறை நடுவர் நியமிக்கப்படுவார். மற்ற இருவர் சமூக சேவை, குழந்தைகள் நலம் ஆகியவற்றில் அனுபவம் பெற்ற அங்கத்தினராகவும் இடம் பெறுவர். இந்த இருவரில் ஒருவர் பெண்ணாக இருத்தல் அவசியம். இந்த குழுமத்தில் உள்ள அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் குற்றவியல் நடைமுறை சட்டத்தில் மேஜிஸ்டிரேட்டுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் உண்டு.

## 4.4 சைல்டு லைன் 1098




ஆபத்தில் சிக்கியுள்ள குழந்தைகளை உடனடியாக மீட்பதற்க்கு ஏற்படுத்தப்பட்ட 24 மணி நேரமும் செயல்படும் இலவச தொலைபேசி எண் 1098 ஆகும். தமிழ் நாட்டில் தொண்டு நிறுவனங்கள் மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் இந்த சைல்டுலைன் 1098 இலவச தொலைபேசி சேவை இயங்குகிறது.

### எப்பொழுது 1098ஐ அழைக்கலாம்

- பாதுகாப்பற்று ஆபத்தான சூழலில் இருத்தல்
- அனாதையாக்கப்பட்டு கவனிப்பாரற்று இருத்தல்
- கொத்தடிமையாகவோ அல்லது வேலையில் அமர்த்தப்பட்டிருத்தல்
- உடல், மன ரீதியான பாதிப்புக்கு ஆளாகி இருத்தல்

- பாலியல் தொந்தரவுக்கு ஆளாகி இருத்தல்
- குழந்தைகள் விற்கப்பட்டோ, கடத்தப்பட்டோ, அல்லது குழந்தை நலன் பாதிக்கும் வண்ணம் இடம் மாற்றப்பட்டோ இருத்தல்
- குழந்தைத் திருமணம் நடக்கும் பட்சத்தில்
- பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருந்தால்

குழந்தையின் நலன் கருதும் நபர் அல்லது பாதிக்கப்பட்ட குழந்தை 1098ஐ அழைக்கலாம்.



## 4.5 தன்னார்வு தொண்டு நிறுவனம்

குழந்தைகளின் நலனுக்காக செயல்படும் தன்னார்வு தொண்டு நிறுவனங்கள் அனைத்தும் இளைஞர் நீதி சட்டத்தின் கீழுள்ள விதிமுறைப்படி அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும்.

## 4.6 காவல்துறை / சிறப்பு இளைஞர் காவல்துறை அலகு / இரயில்வே காவல் துறை

குழந்தைகள் பாதுகாப்பிற்குக் காவல் துறை பல சிறப்பு பிரிவுகளை அமைத்துள்ளது.

ஒவ்வொரு மாவட்டம் மற்றும் நகரத்தில் சிறப்பு இளைஞர் காவல் துறை அலகு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று இளைஞர் நீதிச் சட்டம் வரையறுத்துள்ளது. குற்றம் புரிந்ததாகக் கருதப்படும் குழந்தைகளைத் தனி கவனத்துடன் அணுகுவது மற்றும் அவர்களைப் பற்றி முழுவதுமாக புரிந்து கொண்டு அவர்களின் மறுவாழ்வு போன்ற செயல்களுக்காகக் காவல் துறை அதிகாரி தன்னை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே இந்த அலகின் முக்கியத்துவம் ஆகும்.



மேலும் ஒவ்வொரு காவல் நிலையத்திலும் ஒரு காவல் துறை அதிகாரி குழந்தைகளின் நலனிற்கான பயிற்சியைப் பெற்ற நபராக இருக்க வேண்டும் என இச்சட்டம் வரையறுத்துள்ளது.

ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு சிறப்பு இளைஞர் காவல் துறை அலகின் உதவிக்காக இரண்டு சமூக அலுவலர்களை நியமிக்கலாம் என வரையறுத்துள்ளது. சமூக அலுவலர்களை நியமிக்கும் பணி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் பொறுப்பாகும்.

## 4.7 ஊராட்சி அமைப்பு (பஞ்சாயத்து ராஜ்)



ஊராட்சி அமைப்புகள் மாநிலங்களில், பல வடிவங்களில் செயல்பாட்டில் இருந்தபொழுதும் பல காரணங்களால் இவ்வமைப்புகள் சிறப்புடன் செயல்படவில்லை. இவற்றைக் கருத்தில் வைத்துக்கொண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி, 1992ம் ஆண்டு 73வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தில் மூன்றடுக்கு ஊராட்சி முறை அறிமுகம் செய்யப்பட்டது. 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள்

சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் இயற்றப்பட்டதன் விளைவாக மூன்றடுக்கு ஊராட்சி முறை ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன

1. கிராம அளவில்
2. வட்டார அளவில்
3. மாவட்ட அளவில்



மூன்றடுக்கு ஊராட்சியில் கிராம ஊராட்சிகள் தான் மிகவும் முக்கியமானதும், கூடுதல் பொறுப்பு உடையதாகவும் உள்ளது. உள்ளாட்சி அமைப்புகளை ஏற்படுத்தி அவற்றை வலுப்படுத்துவதன் நோக்கமே பரவலாக்கப்பட்ட ஜனநாயகத்தை உருவாக்குவதுதான். பல்லாயிரக் கணக்கான மக்கள் நேரடியாக நிர்வாகத்தில் பங்கு கொள்ள ஊராட்சி அமைப்புகள் வாய்ப்பை ஏற்படுத்துவதுடன் கிராமத்திலுள்ள சமூகம் தங்களைத் தாங்களே நிர்வகித்துக் கொள்ள வழிவகை செய்கிறது. நாட்டின் வளர்ச்சியிலும் மற்றும் வளர்ச்சி நிர்வாகத்திலும் பங்கு உள்ளதாக மக்களுக்கு உணர்த்தும் அமைப்பாகவே ஊராட்சி அமைப்புகள் விளங்குகின்றன.

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் கிராம சபை அமைக்கப்பட்டுள்ளது. மாநில அரசின் சட்டப் பேரவையினால் வகுத்துரைக்கப்படும் சட்டத்திற்கிணங்க கிராம அளவில் அதிகாரங்களையும், பொறுப்புகளையும் கிராம சபை ஆற்றி வரும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு – 1ன் படி ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும், அக்கிராம ஊராட்சி பகுதிகளில் வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்ட அனைத்து நபர்களும் உறுப்பினர்களாவர்.

### பொறுப்புக்கள்:

- கிராம ஊராட்சியின் ஆண்டு வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தல்
- தனி நபர் பயன்பெறும் திட்டங்களுக்கான பயனாளிகள் பட்டியலுக்கு அங்கீகாரம் அளித்தல்
- சமுதாய சொத்துக்களை ஏற்படுத்த, தேர்ந்தெடுக்கப்பட்ட பணிகளுக்கு அங்கீகாரம் அளித்தல்
- திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் செயல்பாட்டில் உள்ள பல்வேறு விவரங்கள் குறித்து ஆய்வு செய்தல் மற்றும் அறிவுரை வழங்குதல்
- ஊராட்சிகளால் நிறைவேற்றப்படும் பணிகளின் தரத்தை சமூக தணிக்கை மூலம் கண்காணித்தல் மற்றும் கவனிப்பாய்வு செய்தல்
- ஆண்டு தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகளைப் பரிசீலித்து அங்கீகரித்தல்
- சமுதாய ஒருங்கிணைப்பு மத நல்லிணக்கத்திற்கான நடவடிக்கைகளை பரிந்துரைத்தல்
- கிராம ஊராட்சியின் வரவு செலவு திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தல்

## 4.8 பள்ளி மேலாண்மை குழு



குழந்தைகளுக்கான கல்வி உரிமைச் சட்டம் 2009ல் நிறைவேற்றப்பட்டது. இதன்படி மத்திய மாநில அரசுகள் மட்டுமின்றி அனைத்துத் தரப்பினரும் இணைந்து தரமான கல்வியை அளிப்பதற்கு அனைவரும் கல்வி பெறும் வகையில் தங்கள் பங்கினை அளிக்க வேண்டும். ஆசிரியர்கள், பெற்றோர்கள், உள்ளூர் பிரமுகர்கள், தலைவர்கள், (மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூர் தலைவர்கள்) இணைந்து ஒவ்வொரு பள்ளியிலும் பள்ளியின் தரத்தை உயர்த்துவது, மாணவர்கள் சேர்க்கை மற்றும் மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகளை பெற்றுத்தரப் பள்ளி மேலாண்மைக் குழு அமைத்து செயல்பட வேண்டும்.

பள்ளி மேலாண்மைக் குழு ஒவ்வொரு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளியிலும் கட்டாயம் அமைக்கப்படுதல் வேண்டும்.

- இக்குழுவின் உறுப்பினர்களில் 75% பேர் பெற்றோர் அல்லது பாதுகாப்பளார்கள் இருத்தல் அவசியம்
- வாய்ப்புகள் மறுக்கப்பட்ட சமூகங்களையும் நலிந்த பிரிவுகளையும் சேர்ந்த பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர்களுக்கு இக்குழுவில் விகிதாச்சார முறைப்படி பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும்.

பணிகள்:

- பள்ளியின் செயல்பாடுகளை கவனித்தல்
- பள்ளி வளர்ச்சி திட்டம் தயாரித்தல்
- அரசு நிதி ஒதுக்கீட்டை முறையாக பயன்படுத்துவது மற்றும் கண்காணிப்பது
- பள்ளியில் குழந்தைகளின் பங்கேற்பை உறுதி செய்வது
- ஒவ்வொரு ஆண்டும் வகுப்பு வாரியாக மாணவர் சேர்க்கைக்கு திட்டமிடுதல், உறுதிப்படுத்துதல்
- பள்ளி உள் கட்டமைப்பைப் பற்றி தேவையானவைகளை குறித்து திட்டமிடுதல்
- மூன்று ஆண்டுகளுக்குத் தேவையான கூடுதல் நிதி குறித்து திட்டமிடுதல் வேண்டும்
- ஆண்டுதோறும் திட்டமிடுதல் வேண்டும்.
- ஒவ்வொரு நிதி ஆண்டு முடிவுக்கு முன் அதாவது மூன்று மாதங்களுக்கு முன்பாக திட்டம் தயாரித்தல் வேண்டும்.
- அனைத்தையும் தயாரித்து கையொப்பமிட்டு நிதியாண்டிற்கு முன்பு தருதல் வேண்டும்.

## 4.9 கிராம நல வாழ்வு, நீர், துப்புரவு மற்றும் ஊட்டச்சத்து குழு

தேசிய கிராமப்புற சுகாதார திட்டம் 2005ம் ஆண்டு தேசிய ஊரக சுகாதார திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. 2011ம் ஆண்டு இத்திட்டத்தை கிராம நல வாழ்வு, நீர், துப்புரவு மற்றும் ஊட்டச்சத்து திட்டம் என மாற்றப்பட்டது. கிராம அளவில் ஆரோக்கியம் மற்றும் அதன் சமூகத் தீர்மானங்களைப் பற்றிய பிரச்சனைகள் தொடர்பாக கூட்டு நடவடிக்கைகளை எடுக்க இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. சுகாதார விழிப்புணர்வு, சுகாதார சேவைகளை மேம்படுத்துவது, குறிப்பிட்ட உள்ளூர் தேவைகளை பூர்த்தி செய்வது, சமூக அடிப்படையிலான திட்டமிடல் மற்றும் கண்காணித்தல் போன்ற செயல்களை இக்குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

### இக்குழுவின் நோக்கம்:

- சமுதாயத்திற்கான சுகாதார திட்டங்கள் மற்றும் அரசாங்கத்தின் முயற்சிகளில் பங்கேற்று அதை திட்டமிட்டு செயல்படுத்துவதற்கான ஒரு நிறுவன முறையை அமைத்தல்
- சுகாதாரத்துடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புடைய மற்ற துறைகளுடன் இணைந்து செயல்படுவதற்கான தளத்தை உருவாக்குதல்
- சுகாதாரத் தேவை, அனுபவம், பிரச்சனை போன்றவற்றிற்கான குரலை சமுதாயம் எழுப்புதல், உள்ளூர் அரசாங்கம் மற்றும் பொது சுகாதாரத் பணியாளர்கள் கவனத்திற்கு கொண்டு செல்வதற்கான நிறுவன முறையை அமைத்தல்
- ஒரு கிராமம் சிறந்த சுகாதார நிலையை அடைவதற்கு பஞ்சாயத்துக்கும் பொறுப்பு உண்டு என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் அதை உறுதி செய்தல்
- சமுதாய சுகாதார பணியாளர்களுக்கு ஆதரவு அளித்தல் மற்றும் வசதிகளை வழங்குதல்



# துன்புறும் சூழலில் வாழும் குழந்தைகள்



காணாமல் போன / தொலைந்து போன/ கண்டுபிடிக்கப்பட்ட குழந்தைகள்



குற்றம் புரிந்ததாக கருதப்படும் குழந்தைகள்



தெருவோர சிறார்கள்



அனாதையாக்கப்பட்ட / கைவிடப்பட்ட / ஆதரவற்ற அல்லது வறுமையில் உள்ள குழந்தைகள்



குழந்தைத் தொழிலாளர்கள்



மாற்றுத் திறனாளி குழந்தைகள்



கடத்தப்பட்ட குழந்தைகள்



போதைப் பொருட்களுக்கு அடிமையான குழந்தைகள்



வன்கொடுமைக்கு ஆளான குழந்தைகள்




எச்.ஐ.வி. / எய்ட்ஸ் தொற்று நோயுள்ள / பாதிக்கப்பட்ட குழந்தைகள்



இயற்கை பேரழிவால் பாதிக்கப்பட்ட குழந்தைகள்

## குழந்தை பாதுகாப்பு அனைவரின் கடமை - இது உங்கள் கடமை

குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக நம் நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் சட்டங்கள் ஏராளமாக இருப்பதால் மட்டுமே குழந்தைகளுக்குப் பாதுகாப்பான சூழல் ஏற்பட்டுவிடும் என நாம் கூறவிட முடியாது.

காரணம் சமூகத்தின் இதர கூறுகளான அதன் தன்மை, கலாச்சாரம், பாரம்பரிய பழக்க வழக்கங்கள், மூட நம்பிக்கைகள் போன்றவைகளும் குழந்தை பாதுகாப்பில் சம்பந்தப்பட்டுள்ளது.

ஆகவே, இது அரசின் கடமை என்பதுடன் நிற்காமல் பொறுப்புள்ள அனைவரின் கடமை, சமுதாயத்தின் கடமை என உணர வேண்டும். எந்த முடிவுகள் எடுக்கப்பட்டாலும், எத்தகைய நடவடிக்கைகள் எடுத்தாலும் அது குழந்தைகளின் நலனைப் பிரதானப்படுத்துவதாகவும், முன்னிலைப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும். இதனை தான் ஐக்கிய நாடுகள் சபை (நவம்பர் 20, 1959) “இருப்பதில் சிறந்தவற்றை குழந்தைகளுக்கு வழங்க மனித இனம் கடன்பட்டுள்ளது” எனக் கூறியுள்ளது.

எனவே, அரசு மற்றும் தொண்டு நிறுவனங்களுடன் சமூகத்தின் அங்கத்தினர்களான பெற்றோர், ஆசிரியர், தனிநபர், காவல்துறையினர், மருத்துவர்கள், அரசு அலுவலர்கள், பத்திரிக்கையாளர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் (கிராம பஞ்சாயத்து உறுப்பினர்களிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் வரை) இணைந்து குழந்தைகள் பாதுகாக்கப்பட அவர்களது உரிமைகள் நிலைநிறுத்துவதற்கு செயல்பட வேண்டும். இப்பணி அவர்களின் மிக முக்கிய கடமையாகும்.

### பெற்றோர்:

குழந்தைகளும் தனிமனிதர்கள், அவர்களுக்கும் அனைத்து உரிமைகளும் உண்டு என்பதை புரிந்துகொள்ளவேண்டும். குழந்தைகளைக் குடும்பத்துடனும், அன்புடனும், அரவணைப்புடனும் வளர்ப்பது பெற்றோரின் கடமை.



- தம்முடைய விருப்பங்களைக் குழந்தைகளின் எதிர்காலத்தின் மீது திணிக்காமல் குழந்தைகளின் எண்ணங்களுக்கும், கருத்துக்களுக்கும் மதிப்பளித்து அவற்றை வெளிப்படுத்த வாய்ப்பு அளிக்க வேண்டும்.
- பெற்றோர் மீது குழந்தைக்கு நம்பிக்கை ஏற்படும் வண்ணம் நடந்து கொள்ள வேண்டும்.
- குடும்பத்தில் எடுக்கப்படும் எந்த உயர் முடிவுகளானாலும் குழந்தையின் நலனைப் பிரதானமாகக் கருதப்பட வேண்டும்.
- குழந்தைகளின் கல்வி, ஆரோக்கியம் மற்றும் சத்தான உணவு போன்றவற்றை உத்திரவாதப்படுத்த வேண்டும்.
- வன்கொடுமைகளிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பது பெற்றோரின் மிக முக்கியமான கடமையாகும்.

### ஆசிரியர்:



பெற்றோருக்கு அடுத்தப் படியாக குழந்தை பாதுகாப்பில், வளர்ச்சியில் மிகப்பெரிய பொறுப்பு வகிப்பவர்கள் ஆசிரியரே. ஆசிரியர்கள் குழந்தையின் வளர்ச்சியில் பிரதான பங்கை வகிப்பதால் ஆசிரியர்களை வருங்கால சமுதாயத்திற்கான மனிதர்களை உருவாக்குபவர்கள் எனக் கூறலாம். ஆகவே குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பில் ஆசிரியர்களின் கடமை மிக முக்கியமானது ஆகும்.



- குழந்தைகளிடம் பாரபட்சம் காண்பிக்காமல் கல்வி கற்பிக்கும் முறையுடன் குழந்தைகளின் பங்கேற்பையும் ஊக்குவிக்க வேண்டும்.
- குழந்தைகளுக்கு மன மற்றும் உடல் ரீதியான தண்டனைகளை தராமல் மாற்றுவழியில் அவர்களை திருத்துவதுடன், முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும்.
- மாணவர்களின் வருகை 100% உள்ளதா என்பதை கண்காணிக்க வேண்டும். அவ்வாறு குறையும் பட்சத்தில் காரணத்தை என்ன என்று ஆராய்ந்து அதற்கான தீர்வு காண வேண்டும்
- குழந்தைகளின் நலனிற்கான கண்காணிப்பு குழுக்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

## தன்னார்வு தொண்டு நிறுவனங்கள்:

- குழந்தை காப்பக நிறுவனங்கள் சட்டப்படி அங்கீகாரம் பெற்றிருத்தல் வேண்டும்.
- சமுதாய விழிப்புணர்வு மற்றும் செயல்பாடுகள் மூலம் அரசு கொள்கைகள், குழந்தை பாதுகாப்பிற்கு துணையாக இருக்கும் வகையில் செயல்படுதல்
- தங்கள் மாவட்டங்களில் உள்ள குழந்தைகளின் நிலை பற்றிய தகவல்களைச் சேகரித்து அரசு அதிகாரிகளிடம் தெரிவித்தல்
- அரசுக்கும் மக்களுக்கும் இடையே ஓர் இணைப்புப் பாலமாக செயல்படுதல்
- எந்த குழந்தை எங்கு பாதிக்கப்பட்டாலும் அக்குழந்தையை மீட்க 24 மணி நேரமும் தயாரான நிலையில் விழிப்புடன் இருத்தல்
- மீட்கப்பட்ட குழந்தைகளைத் தங்கள் தொண்டு நிறுவனங்களில் சேர்த்து பராமரித்தல் மற்றும் அவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் ஆலோசனை வழங்குதல்
- பள்ளி செல்லும் வயதுடைய அனைத்து குழந்தைகளும் பள்ளிக்கு அனுப்புவதற்கான செயல்பாடுகளை மேற்கொள்ளுதல்

## பெற்றோர் ஆசிரியர் கழகம்:

- குழந்தை உரிமைகள் பெற்றோர் ஆசிரியர் கழகப் பணிகளுடன் உள்ளார்ந்ததாக இருத்தல் அவசியம்.
- பாதிக்கப்பட்ட குழந்தைகள் அவர்களுடைய கருத்துக்களை வெளிப்படையாகக் கூறுவதற்கு பாதுகாப்பான சூழ்நிலையை ஏற்படுத்தித் தருதல்
- குழந்தை உரிமைகளைப் பற்றிய விழிப்புணர்வை அனைவரிடமும் ஏற்படுத்துதல்
- மாவட்ட அலுவலர், பஞ்சாயத்து உறுப்பினர்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்காக செயல்படும் மற்ற துறைகளுடன் இணைந்து செயல்படுதல்

## பத்திரிக்கையாளர்கள்:

- குழந்தை உரிமைகள் மற்றும் குழந்தை பாதுகாப்பைப் பற்றி அனைவரும் அறியும் வகையில் வெளிப்படுத்துவது மிக முக்கியமானது
- குழந்தை பாதுகாப்பிற்கு தற்பொழுது எழுந்துள்ள அச்சுறுத்தல்களை செய்திகள் வாயிலாக பொதுமக்களுக்கு முறையாக தெரிவிப்பது மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் குழந்தை உரிமைகள் குறித்த விழிப்புணர்ச்சியை தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் ஏற்படுத்துதல்.







## காவல் துறையினர்



- குழந்தைகளின் நலனிற்காக செயல்படும் சைல்டுலைன் 1098 அமைப்பிற்கு முழு ஒத்துழைப்பு தருதல்
- குழந்தை பாதுகாப்பிற்காக செயல்படும் மாநில கண்காணிப்பு குழுவிலிருந்து கிராம கண்காணிப்பு குழுவரை காவல் துறை பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இருத்தல் அவசியம்
- பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளை இனங்கண்டு அவர்களின் மறுவாழ்விற்கான குழுமம் அல்லது நிறுவனத்திடம் ஒப்படைத்தல்.

## மருத்துவர்கள்:



- சுகாதார துறையின் திட்டங்கள் அனைத்தையும் முழுமையாக அனைத்து கிராமங்களிலும் நிறைவேற்றுவதில் மருத்துவர்களின் பங்கு இன்றியமையாதது.
- தாங்கள் பொறுப்பேற்றுள்ள பகுதிகளில் 100% நோய் தடுப்பு முறைகள் கையாளப்பட்டுள்ளதா என்பதை மருத்துவர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.
- பெண் சிசு கொலை / கருக்கொலை நடைப்பெறுதலை கண்காணித்து தடுக்கும் மிகப்பெரிய பொறுப்பு மருத்துவர்களுக்கு உள்ளது.

## நீதித் துறை அலுவலர்கள்:



- நீதிமன்றத்திற்குண்டான கெடுபிடிகள் எதுவும் இன்றி குழந்தைகள் தங்கள் கருத்துக்களை தயக்கமின்றி வெளிப்படுத்துவதற்கான சூழலை ஏற்படுத்தி தருதல்
- குழுமத்தின் நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்த செய்தி வெளியிடும்போது, குழந்தையை இனம் காணும் விதத்தில் செய்தி வெளியிடுவதை தவிர்த்தல் அல்லது அத்தகைய செய்திகளை வெளிப்படுத்தும் ஊடகங்கள் அல்லது இதர அமைப்புகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்தல்
- வழக்கு விசாரணையின் இறுதியில் குழந்தைகளுக்கு எது நன்மையோ அதற்கு ஆவண செய்வது போன்றவை குழந்தைகள் நலக் குழுமம் மற்றும் இளைஞர் நீதிக் குழுமத்தின் பணிகளாக இளைஞர் நீதி சட்டம் வரையறுத்துள்ளது.

## தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள்:

- கிராம பஞ்சாயத்து மற்றும் நகராட்சி மன்றங்களுக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் குழந்தைகளை பாதுகாப்பதில் முக்கிய அதிகாரம் பெற்றவர்களாவர்
- பெண்கள் - குழந்தைகள் கடத்தப்படுவதை தடுக்கும் சமூக பாதுகாப்பு துறை, கல்வி திட்டம், சுகாதார திட்டம், கிராம நிர்வாகம், போன்ற கிராம முன்னேற்றத்திற்கான அனைத்து திட்டங்களிலும் பஞ்சாயத்து உறுப்பினர்கள் மற்றும் நகராட்சி குழு உறுப்பினர்களின் பங்கு மிகவும் முக்கியமானதாகும்.
- குழந்தை உரிமைகள் நிலைநிறுத்தப்பட, குழந்தைகள் பாதுகாக்கப்பட, குழந்தைகளுக்கான இந்த செயல் திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும். இது கிராம பஞ்சாயத்து மற்றும் நகராட்சி மன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்பிலேயே உள்ளது.



## ஒருங்கிணைப்பு:

குழந்தைகளுடன் நேரடியாக தொடர்புடைய மற்றும் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பெற்றோர், ஆசிரியர், காவல் துறையினர், மருத்துவர்கள், அரசு அலுவலர், நீதி துறையினர், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், பத்திரிக்கையாளர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் (கிராம பஞ்சாயத்து மற்றும் நகராட்சி குழு உறுப்பினர்கள்) ஆகியோருக்கு குழந்தைகள் பாதுகாப்பில் உள்ள பொறுப்புகள் நிதர்சனமானவை.

- இந்த கடமைகளை நிறைவேற்றுவதில் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்க இவர்களிடையே ஓர் ஒருங்கிணைப்பு இருத்தல் அவசியம்
- பெற்றோருக்கும், ஆசிரியருக்கும் இடையில் நல்ல சுமூகமான உறவு இருந்தால் தான் குழந்தைகள் பாதுகாப்பும், உரிமைகளும் உறுதிப்படும். இதற்கு பெற்றோர் – ஆசிரியர் கழகங்கள் மற்றும் பள்ளி மேலாண்மை குழு அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்படுதல் வேண்டும்.
- ஆசிரியர்கள் அவர்கள் பள்ளி அமைந்துள்ள கிராம மற்றும் நகராட்சிகளின் பஞ்சாயத்து குழு அல்லாத மன்றக் குழுக்களுக்கு இடையே தொடர்பு இருக்க வேண்டும். அப்போது தான் பள்ளி இடைவிலகல்கள் இருக்குமாயின் அதற்கான காரணங்கள் என்ன என்பதை கண்டறிந்து ஆவண செய்ய முடியும்.
- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம பஞ்சாயத்து நகராட்சி ஒன்றிய குழுக்களுக்கும் அப்பகுதி காவல் துறையினருக்கும் இடையே குழந்தைகள் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினையில் ஒருங்கிணைப்பு நிலவுதல் மிக அவசியம்.
- காவல் துறையினர் செயல்பாடுகளுக்கு சமூக ஒத்துழைப்பு மிக மிக அவசியம்
- மருத்துவர்கள் கருக்கலைப்பு செயல்களை கண்காணிக்கும்பொழுது சமுதாய நலன், குழந்தைகள் பாதுகாப்பு குறிப்பாக பெண் (கரு முதல்) குழந்தைகள் பாதுகாப்பு முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும்.
- குழந்தைகள் பாதுகாப்பிற்கு அரசு ஆக்கப்பூர்வமான பல நடவடிக்கைகள் எடுக்க சம்பந்தப்பட்ட அரசு துறைகளுக்கிடையே ஓர் ஒருங்கிணைப்பு இருப்பது அவசியம்
- தொண்டு நிறுவனங்கள் அனைவரையும் ஒருங்கிணைப்பவர்களாக செயல்பட வேண்டும். குறிப்பாக சமுதாயத்தை அரசுடனும் அரசை சமுதாயத்துடனும் ஒருங்கிணைத்து செயல்பட தொண்டு நிறுவனங்கள் பாலமாக பணிபுரிய வேண்டும்.
- பத்திரிக்கைகள் மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள் சமூகத்தில் உள்ள குழந்தைகளின் பிரச்சினைகள், குழந்தைகளுக்கு தேவைப்படும் பாதுகாப்பு அம்சங்களை பிரதிபலிப்பவர்களாக செயல்படுவதும், உண்மை நிலவரத்தை செய்திகளாக வெளியிடுவதும், சமுதாய அங்கத்தினர்களிடையே நல்ல உறவை பேணுவதும் அவசியம்.

ஆகவே குழந்தைகள் பாதுகாப்பில் குழந்தைகளுடன் நேரடியாக தொடர்புடைய சம்பந்தப்பட்ட சமூக அங்கத்தினர்களிடையேயும் அரசு மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கிடையேயும் நல்ல ஒத்துழைப்பு இருந்தால்தான் குழந்தைகளை பாதுகாக்கும் பணி முற்றிலும் ஓர் வளையமாக ஒருங்கிணைக்கப்படும். அரசு மற்றும் தொண்டு நிறுவனங்களின் திட்டங்கள் மூலமும் பல்வேறு சட்ட வழிவகைகளின் மூலமும் குழந்தைகள் பாதுகாப்பும், குழந்தை உரிமைகளும் அப்போது தான் உறுதிப்படுத்தப்படும்.

## கிராமம், வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் கண்காணிப்பதன் மூலம் குழந்தை பாதுகாப்பு உறுதி செய்ய இயலும்



# அத்தியாயம்




# 5

# கிராம அளவிலான குழந்தை பாதுகாப்பு குழுவின் பணிகள் மற்றும் பொறுப்புக்கள்

ஒரு நாட்டின் முதுகெலும்பு என்பது கிராமம். ஒவ்வொரு கிராம அளவில் ஒரு குழந்தைக்கு ஏற்படும் பிரச்சனையை தொகுத்து பார்த்தாலே தெரிந்துவிடும் அந்நாட்டில் உள்ள குழந்தைகளின் நிலவரம். ஆகவேதான் குழந்தைளுக்கு தேவையான பாதுகாப்பை அளித்திடவும் உறுதி செய்திடவும் கிராம அளவில் கண்காணிப்பு குழுக்களை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கண்காணிப்பு குழுவைதான் கிராம அளவிலான குழந்தை பாதுகாப்பு குழு என ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்புத் திட்டம் வரையறுத்துள்ளது. இதை சரியாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் குழந்தைகளுக்கு ஏற்படும் பல அச்சுறுத்தல்கள் மட்டுமன்றி குழந்தைத் திருமணம், குழந்தைக் கடத்தல் போன்றவற்றைத் தடுக்க முடியும்.

## கிராம அளவிலான குழந்தை பாதுகாப்பு குழுவின் உறுப்பினர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | கிராம பஞ்சாயத்து தலைவர் | - | தலைவர் |
| 2. | கிராம நிர்வாக அலுவலர் | - | கூட்டமைப்பாளர் |
| 3. | உயர் நிலை (அ) மேல்நிலை (அ) பள்ளியின் தலைமையாசிரியர் | - | உறுப்பினர் |
| 4. | இரண்டு குழந்தை பிரதிநிதிகள் (உள்ளூர் பள்ளி தலைமையாசிரியரால் பரிந்துரைத்த) | - | உறுப்பினர் |
| 5. | மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகின் உறுப்பினர் | - | உறுப்பினர் |
| 6. | அங்கன்வாடி பணியாளர் | - | உறுப்பினர் |
| 7. | கிராம சுகாதார செவிலியர் / ANM | - | உறுப்பினர் |
| 8. | தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் பிரதிநிதி (கிராமத்தில் தொண்டு செய்யும் நிறுவனம்) | - | உறுப்பினர் |

## பணிகள்:

- குறைந்தது மூன்று மாதத்திற்கு ஒரு முறையாவது காலமாற்றமின்றி கூட்டம் நடத்தப்பட வேண்டும்
- கூட்டத்தில் குழந்தைகள் மற்றும் பெண்கள் கடத்தப்படுதல், சுரண்டப்படுதல் மற்றும் குழந்தை பாதுகாப்பை பற்றி கலந்தாலோசித்தல்
- கூட்ட அறிக்கையை தயார் செய்தல் மற்றும் தயார் செய்த அறிக்கையை மாவட்ட ஆட்சியாளரிடம் சமர்ப்பிக்கும் பொறுப்பு கிராம நிர்வாக அலுவலர் / குழுவின் கூட்டமைப்பாளரை சார்ந்தது.
- அறிக்கையை கூட்டம் நடைப்பெற்றதிலிருந்து 10 நாட்களுக்குள் மாவட்ட ஆட்சியாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.
- கிராம கண்காணிப்பு குழுவின் அறிக்கையை மூன்று மாதத்திற்கு ஒரு முறை சமூக பாதுகாப்பு இயக்குநரகத்திடம் சமர்ப்பிப்பது மாவட்ட ஆட்சியரின் பொறுப்பு ஆகும்.

- கிராமத்தில் குழந்தை பாதுகாப்பை தொடர்ந்து ஆய்வு செய்வது அல்லது தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்காக கூட்ட அறிக்கையை தகுந்த துறை அலுவலருக்கு இயக்குநரால் தகவல் அனுப்பப்படும்.
- சமூக பாதுகாப்புத் துறை உறுப்பினர்களின் குழு கூட்ட அறிக்கையை பெறுவதை உறுதி செய்தல்

### குழந்தைகள் பாதுகாப்பு குறித்து நமது கிராமம் குறிப்பிட்டுள்ள இலக்குகள்

- பத்தாம் வகுப்பு வரை அனைத்து குழந்தைகளும் பள்ளி செல்வதை உறுதிப்படுத்துதல்
- குழந்தைத் தொழிலாளர்கள் அறவே இல்லாமல் உறுதி செய்தல்
- 100% நோய் தடுப்பு முறைகள் கையாளப்படுதல்
- ஊட்டச்சத்து பற்றாக்குறை இல்லாத கிராமங்களை உறுதி செய்தல்
- பெண் குழந்தை பிறப்பை கட்டுப்படுத்தும் கருச்சிதைவுகள் நிகழாமல் பார்த்துக் கொள்ளுதல்
- குழந்தைகளுக்கு தீங்குகள், கொடுமைகள் நிகழாமல் பாதுகாத்தல்
- கடத்தல் நிகழ்வதை தடுத்தல்
- தீண்டாமையை ஒழித்து சமூக ஒற்றுமையை ஏற்படுத்துதல் போன்றவைகள் “நமது கிராமம்” குறிப்பிட்டுள்ள இலக்குகள் ஆகும்.

*ஆதாரம்: நமது கிராமம் 2004-2005, அரசு ஆணை எண் 140*

### குழந்தைகளின் பாதுகாப்பிற்கு நீங்கள் என்ன செய்யலாம்:

- குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்தல்
- குழந்தைகளுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் அதனை தடுத்து அவர்களின் மறுவாழ்வினை உறுதி செய்வது
- குழந்தை உரிமைகள், அரசின் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் குழந்தை பாதுகாப்பு குறித்த தகவல்களை அனைவரும் அறியும் வண்ணம் விளம்பரப்படுத்துதல்
- அவசியம் ஏற்படும் பொழுது கூட்டத்தை உடனடியாக கூட்டுதல்
- கூட்டத்தின் தீர்மானங்களை நிறைவேற்றுதற்கான செயல்பாடுகளை மேற்கொண்டுள்ளனரா என்பதை உறுதி செய்தல்
- குழந்தைகள் அனைவரும் 100% பள்ளியில் இருக்கின்றனரா என்பதை ஆசிரியர்கள் வழியாக கண்காணித்தல்
- திருவிழா காலம் மற்றும் பொதுவிழா நிகழ்ச்சியின் பொழுது, கலைவடிவிலோ, கருத்துரைகள் மூலமோ குழந்தை உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல்
- குழந்தைகளடங்கிய குழந்தை உரிமை குழுக்களை வார்டு வாரியாக ஏற்படுத்துதல்
- கிராம எல்லை மற்றும் பேருந்து நிறுத்தங்களில் கண்காணிப்பை பலப்படுத்துதல்
- குழந்தைத் திருமணம் என்றால் திருமணத்திற்கு முன்பாகவே தகவல் அளித்தல்
- குழந்தைத் திருமணத்தால் ஏற்படும் தீமைகளைப் பற்றி சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

# குழந்தை பாதுகாப்பைக் கண்காணிக்கும் நிலை

குழந்தை பாதுகாப்பைக் கண்காணிப்பதற்கான நிலையை ஒரு வரைப்படமாக கொடுக்கப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு நிலையின் அருகில் அதற்குத் தகுந்த சில மாதிரி செயல்பாடுகளும் கொடுக்கப்பட்டுள்ளது. கிராம அளவிலான குழந்தை பாதுகாப்பு குழு இந்த நிலைகளை மேற்கொள்வதால் குழந்தைகளின் பாதுகாப்பை கண்காணித்து உறுதி செய்ய இயலும்.



## கிராம கண்காணிப்புக் குழுவால் கண்காணிக்க வேண்டிய பொதுப் பணிகள்



தடுப்பூசி போடுதலை உறுதி செய்தல்



சுகாதார பணிகள் செம்மையாக செயல்படுத்துவது



தரமான மதிய உணவு அளித்தல்



5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் அங்கன்வாடி மையத்திற்கு செல்லுதல்



அனைத்து குழந்தைகளும் பள்ளிக்கு செல்லுதல்



தரமான கல்வி அளிக்கப்படுகிறதா என்பதை பார்த்தல்



பாதுகாக்கப்பட்ட குடி நீர் கிடைக்கச் செய்தல்



கழிவறை சுத்தமாக வைத்திருப்பதை உறுதி செய்தல்




பொது விநியோக அமைப்பின் மூலம் உணவுப் பொருள் கிடைப்பதை உறுதி செய்தல்



குழந்தை பாதுகாப்பிற்கான யுக்திகளை உறுதி செய்தல்

## குழந்தை பாதுகாப்பிற்காக இயங்கும் அமைப்புகளும் அணுகுமுறையும்



## உங்கள் கவனத்திற்கு

துன்புறும் சூழலில் இருக்கும் குழந்தையோ அல்லது குழந்தையை பார்த்த நபர், யாரிடம் புகார் அளிப்பது எவ்வாறு அணுகுவது என்பதை இந்த வரைப்படம் வண்ண குறியீடுகளுடன் விளக்குகிறது.

மஞ்சள் நிற நீள்வட்டமானது கிராம அளவில் உள்ள குழந்தை பாதுகாப்பு குழு (அ) சத்துணவு பணியாளர் (அ) மருத்துவர் (அ) உள்ளூர் காவல் துறை (அ) சைல்டு லைன் 1098 அணுகலாம்.

பச்சை நிற நீள்வட்டமானது மாவட்ட அளவில் உள்ள குழந்தை நல குழுமம் (அ) மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு (அ) மாவட்ட சமூக நல அலுவலர் (அ) வருவாய் கோட்ட அலுவலர் (அ) முதன்மை கல்வி அலுவலர் (அ) காவல் துறை கண்காணிப்பாளர் (அ) மாவட்ட ஆட்சியர் ஆகியோரை அணுகலாம்.

நீல நிற நீள்வட்டமானது மாநில அளவில் உள்ள சமூக நல அலுவலர் (அ) சமூக பாதுகாப்பு துறை (அ) சமூக நல துறை செயலாளர் (அ) முதலமைச்சர் (அ) பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோரிடம் நேரடியாக புகார் அளிக்கலாம்.

அடர் சிவப்பு குறியீடானது ஒவ்வொரு அளவிலும் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக செயல்படும் நிர்வாக முறையை விளக்குகிறது.

துன்புறும் சூழலில் இருக்கும் குழந்தையோ அல்லது குழந்தையை பார்த்த நபரோ கிராம அளவில் அணுகி தங்களுக்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென்றால் அல்லது பிரச்சனை பெரிதாக இருப்பின் அதற்கான தீர்வு உடனடியாக கிராம அளவில் கிடைக்கவில்லையென்றால் அல்லது தொடர்பு கொள்ள இயலவில்லையென்றால் தாங்கள் மாவட்ட அளவிலோ அல்லது மாநில அளவிலோ அல்லது தேசிய அளவில் உள்ள அமைப்புகளை நேரடியாக புகார் அளிக்க மற்றும் அணுக இயலும்.



# அத்தியாயம்



# 6

# தமிழ்நாட்டின் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சிறப்பு வாய்ந்த சமூக நலத் திட்டங்கள்

1. தொட்டில் குழந்தைத் திட்டம்
2. முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் (பெண்குழந்தைகளுக்கான வைப்பு நிதி)
3. பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்கு கல்வி அளிப்போம்
4. பெண்களுக்கான உயர்கல்வித் திட்டம்
5. பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான பகல் நேர பராமரிப்பு மையம்
6. சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்
7. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம்
8. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம்
9. ஈ.வெ.ரா. மணியம்மயைார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதி உதவித் திட்டம்
10. அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டம்
11. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம்
12. கலப்பு திருமண நிதி உதவி திட்டம்
13. பள்ளி மாணவர்களுக்கு இலவச புத்தகம், இலவச சீருடை, இலவச பேருந்து பயணச் சீட்டு, இலவச மிதி வண்டி மற்றும் இலவச மடிக்கணிணி

# அத்தியாயம்



# 7

# பயிற்றுநர் கவனத்திற்கு

கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழுவிற்கான இக்கையேட்டினை பயிற்சியாக அளிக்கும்பொழுது பயிற்றுநர் சில யுக்திகளை மேற்கொள்ளவேண்டும். இதனால் பங்கேற்பாளர்கள் குழந்தைகளின் உரிமைகள் மற்றும் பிரச்சினைகள் பற்றி மிக எளிதில் புரிந்து கொள்ள முடியும். பயிற்சி அளிப்பதற்கு முன் பங்கேற்பாளர்களை பயிற்சிக்கு ஏற்ற மனநிலையை கொண்டவர்களாக ஆயத்தப்படுத்துதல் மிகவும் அவசியமாகும். இதற்கு இங்கு கொடுக்கப்பட்டுள்ள அல்லது உங்களுக்கு தெரிந்த விளையாட்டுக்களை பயன்படுத்தி பயிற்சி அளிக்கலாம்.

## பயிற்சியின் பொழுது கையாளவேண்டியவை :

- பயிற்சிக்கான திட்டமிடல் (இடம், நேரம், பொருளாதாரம், பயிற்சிக்கான உபகரணங்கள், முறைகள் மற்றும் பங்கேற்பாளர்கள் பற்றிய விவரம்)
- பயிற்சியின் தொடக்க நிலையிருந்து முடியும் வரை பங்கேற்பாளர்களின் மன நிலையை ஒருமுகப்படுத்துவதற்கும், சோர்வடையாமல் இருப்பதற்கும் ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்துதல்
- பயிற்றுநர் தான் மட்டுமே பேசிக்கொண்டு இல்லாமல் பயிற்சி பங்கேற்கும் முறையில் இருத்தல் அவசியம். தேவை ஏற்படும் நேரத்தில் தினசரி நிகழ்வுகளை உதாரணமாக கூறலாம். (மாதிரி நாடகம், குழு விவாதம், கலந்துரையாடல், பட்டிமன்றம், போன்ற முறை)
- பயிற்சியில் பங்கேற்பதற்கு ஏதுவான அமர்வுகளை அமைக்க வேண்டும்.
- பங்கேற்பாளர்கள் அனைவரும் பார்க்கும் வண்ணம் அமரச் செய்ய வேண்டும் (வட்டம் அல்லது அரைவட்டம் சிறந்தது).
- பங்கேற்பாளர்கள் அனைவரையும் சமமான முறையில் நடத்த வேண்டும்.
- பங்கேற்பாளர்கள் கூறும் அனைத்து கருத்துக்களையும் பொறுமையாகவும், கவனத்துடனும் கேட்க வேண்டும்.
- பயிற்சியின் பொழுது நேர மேலாண்மையை கையாளுவது சிறந்தது.
- பயிற்றுநர் பங்கேற்பாளர்கள் அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் கருத்துக்களை பரிமாற்றம் செய்ய வேண்டும்.
- கூடுமானவரை பங்கேற்பாளர்களுக்குத் தெரிந்த மொழியில் பயிற்சி அளித்தல் சிறந்தது.
- பங்கேற்பாளர்கள் ஒருவர் பின் ஒருவராக அவர்களின் கருத்துக்களை கூறவேண்டும் என அறிவித்தல் பயிற்சிக்கு நல்லது.
- பயிற்சிக்கான நோக்கத்தை தெளிவுப்படுத்துதல்.
- பயிற்சியில் பங்கேற்பாளர்களே சரியான தீர்வை தேர்ந்தெடுக்கும் வரை அதற்கான வாய்ப்பு மற்றும் செயல்பாடுகளை தொடர்ந்து அளிக்க வேண்டும்.
- பகிர்ந்து கொள்ளும் கருத்துக்கள் எவர் மனதையும் புண்படுத்தா அல்லது பாதிக்காத வகையில் கூறுவது நல்லது.

- பயிற்றுநர் பொறுமை காப்பது அவசியம். சில நேரத்தில் பங்கேற்பாளர்களின் செயல் கோபத்தை ஏற்படுத்தும் வகையில் இருக்கும். ஆனால் அவற்றை பொறுமையுடன் ஏற்று மறைமுகமான செயலில் அவற்றை சரி செய்தல் அவசியம்.
- பயிற்றுநர் பயிற்சி அளிப்பதற்கேற்ப உபகரணங்களை பயன்படுத்த வேண்டும். (குறும்படம், செய்தித்தாள், புத்தகம், உண்மை சம்பவம் போன்ற ஒலி / ஒளி ஊடகம்)

**பயிற்சியில் மேற்கொள்ளக்கூடிய விளையாட்டுக்களை மூன்று பிரிவுகளாக கொடுக்கப் பட்டுள்ளது.**

### 1. அறிமுக விளையாட்டுக்கள்

பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்கள் பங்கேற்கும் நிலையில், ஏதாவது ஒரு விளையாட்டின் மூலம் ஒருவரையொருவர் அறிமுகம் செய்து கொள்ள வேண்டும். பங்கேற்பாளர்கள் ஒவ்வொருவரின் பெயர், வேலை, திறமை, ஆர்வம் போன்றவற்றை அறிந்துகொள்வதுடன் அவர்களின் ஆரம்ப நிலை தயக்கம் விலகி பயிற்சியில் முழுவதுமாக பங்கேற்பதற்கு அடிப்படையாகவும் அமைகின்றன.

## விளையாட்டு – 1



எல்லோரையும் வட்டத்தில் நிற்க சொல்லவும். ஒவ்வொருவரின் ஆங்கில பெயரின் முதல் எழுத்தை நினைவில் வைத்துக்கொள்ளுமாறு கூற வேண்டும். பின்னர் ஒவ்வொருவரையும் ஆங்கில எழுத்துக்களை சொல்ல சொல்லவும் அதில் அவர்களின் பெயரின் முதல் எழுத்து வரும் இடத்தில் அவர்களின் பெயரை சொல்ல வேண்டும். பின்னர் ஆங்கில எழுத்துக்களை சொல்லி முடிக்க செய்யவும்.

உதாரணம்:

கீதா என்ற பெயர் கொண்ட நபர் G என்ற எழுத்து வரும்பொழுது கீதா என்று மட்டுமே சொல்லவேண்டும். பின்னர் மற்ற எழுத்துக்களை சொல்லி முடிக்க வேண்டும். ABCDEF கீதா, HIJKLMNOPQRSTUVWXYZ

## விளையாட்டு – 2

எல்லோரையும் வட்டத்தில் நிற்க சொல்லவும். ஒவ்வொருவரின் பெயர் வரும் ஒரு பாடல் அல்லது கவிதையை தயார் செய்து கொண்டு அபியநத்துடன் வெளிப்படுத்த வேண்டும் அதற்கான இரண்டு நிமிட கால அவகாசம் பங்கேற்பாளர்களுக்கு பயிற்றுநர் தரவேண்டும். ஒருவர் இந்த செயலை செய்யும்பொழுது மற்றவர் அவரின் பெயரை கண்டுபிடிக்க வேண்டும்.



உதாரணம்:

“கலைவாணி” என்ற பெயர் வரும் பாடலை வீணை ஏந்தும் அபிநயத்துடன் வெளிப்படுத்த வேண்டும். மற்ற நபர் அவரின் பெயரை கலைவானி என்று கண்டுபிடித்து சொல்லவேண்டும்.

## விளையாட்டு – 3



எல்லோரையும் இரண்டு நபர் கொண்ட ஜோடியாக பிரிக்க வேண்டும். ஒவ்வொரு ஜோடியும் அவர்களின் பெயர், கல்வி, ஆர்வம், திறமை, பழக்க வழக்கங்கள் போன்ற பல கருத்துக்களை பகிர்ந்து கொள்ளுமாறு கூற வேண்டும். அதற்கான ஐந்து நிமிட கால அவகாசம் தரவேண்டும். பின்னர் ஒவ்வொரு ஜோடியில் உள்ள நபர்கள் அவர்களின் பெயரை கூறமால் அவர் ஜோடியில் உள்ள நபரின் பெயர் மற்றும் விவரங்களை கூற வேண்டும்.

## 2. புத்துணர்ச்சி விளையாட்டுக்கள்



ஒவ்வொருவருக்கும் உடல் மற்றும் மனச் சோர்வு வருவது என்பது இயல்பானது. ஆகவே பயிற்றுநர் பங்கேற்பாளர்கள் சோர்வு அடையாமல் அவர்களுக்கு பயிற்சி அளித்தால் மட்டுமே அவர்களின் முழு பங்கேற்பு கிடைக்கும். சோர்வு நீக்கி புத்துணர்ச்சி அளிக்கும் வகையில் சில விளையாட்டுக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

## விளையாட்டு – 1

பங்கேற்பாளர்களை மூன்று நபர் கொண்ட குழுவாக பிரிக்கவேண்டும். அதில் இருவரை கைகோர்த்து கூண்டு போல் நிற்க சொல்லவும். ஒருவரை கூண்டிற்குள் நிற்க சொல்லவும். எல்லா குழு உறுப்பினர்களும் நின்ற உடன் பயிற்றுநர் இந்த விளையாட்டின் விதிமுறைகளை கூற வேண்டும்.

1. கிளி என்று சொன்னால் கூண்டில் உள்ள நபர் மட்டும் ஒரு கூண்டு விட்டு மற்றொரு கூண்டிற்கு இடம் மாற வேண்டும்.
2. கூண்டு என்று சொன்னால் கூண்டு போன்று நின்றுள்ள நபர்கள் மட்டும் இடம் மாற வேண்டும்.
3. கிளி என்று சொன்னவுடன் கிளிகள் இடம் மாறும்பொழுது பயிற்றுநர் ஒரு கூண்டில் நிற்க வேண்டும்.
4. வெளியில் வந்த நபர் மீண்டும் விளையாட்டை தொடர்ந்து அவரும் அதுபோல் காலியாகும் கூண்டில் நிற்க வேண்டும். வெளியில் வரும் நபர்களால் மீண்டும் விளையாட்டைத் தொடர வேண்டும்.

## விளையாட்டு – 2

பங்கேற்பாளர்களை வட்டத்தில் கைகோர்த்து நிற்க சொல்ல வேண்டும். பயிற்றுநர் விளையாட்டின் விதிமுறைகளை கூறவேண்டும்.

1. அனைவரும் கைகோர்த்து கொண்டுதான் செய்ய வேண்டும். கையின் இணைப்பு விடும் பட்சத்தில் இணைப்பு விட்ட இரண்டு நபர்களும் விளையாட்டை விட்டு வெளியேற்றப்படுவார்.
2. பயிற்றுநர் கூறும் செயலுக்கு மாறாக செய்பவர் விளையாட்டு விட்டு வெளியேற்றப்படுவார்
3. “உள்ளே குதிக்கவும், வெளியே குதிக்கவும், இடது பக்கம் குதிக்கவும், வலது பக்கம் குதிக்கவும்” இதுபோன்று பயிற்றுநர் பல செயல்களை கூறி விளையாட்டைத் தொடரலாம்.

## விளையாட்டு – 3

பங்கேற்பாளர்களை வட்டத்தில் நிற்கசொல்லவேண்டும். விளையாட்டின் செயல்களை தெளிவாக பயிற்றுநர் பங்கேற்பாளர்களுக்கு சொல்ல வேண்டும்.

1. ஆட்காட்டி விரலை காண்பித்தால் என் பெயர் என்று தனது பெயரை சொல்ல வேண்டும்.
2. இரண்டு விரல் (ஆட்காட்டி மற்றும் நடுவிரல்) காண்பித்தால் சுட்டு விடுவது என்பது ஆகும். பங்கேற்பாளர் உடனடியாக துப்பாக்கியால் சுட்டால் கீழே விழுவதுபோல் செய்ய வேண்டும்.
3. மூன்று விரல் (ஆட்காட்டி, நடுவிரல் மற்றும் மோதிர விரல்) காண்பித்தல் பட்டை நாமம் என்று சொல்லிக்கொண்டே நெற்றியில் போட்டு காண்பிக்க வேண்டும்.
4. நான்கு விரல் காண்பிக்கும்பொழுது பக்கத்தில் உள்ளவரிடம் கைகொடுக்க வேண்டும்.
5. ஐந்து விரல் காண்பிக்கும்பொழுது வணக்கம் இன்றைய நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குபவர் என்று தன் பெயரை சொல்ல வேண்டும்.

இதில் தவறாக செய்யும் நபர் விளையாட்டில் தோற்றவராகி வெளியேற்றப்படுவார்.

## 3. கற்பிக்கும் பொருள் சார்ந்த செயல்பாடுகள்

### பயிற்சியின் நோக்கம்:



பங்கேற்பாளர்கள் குழந்தையின் உரிமைகள் பற்றி அறிந்துகொள்ளுதல், சிந்திக்க வைத்தல் மற்றும் புரிந்துக்கொண்டு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்தலே இப்பயிற்சியின் நோக்கம் ஆகும்.

பயிற்சியின் இறுதியல் பங்கேற்பாளர்கள்

- குழந்தையின் உரிமைகள் என்றால் என்ன என்பது பற்றி வரையறை செய்து, உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள உரிமைகளை பல்வேறு வகையில் தொகுக்கக் கற்றுக்கொள்ளுதல்
- குழந்தைகளின் தேவைகள் என்ன என்பது பற்றி அறிந்துகொள்வது
- உடன்படிக்கையின் வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வது
- குழந்தையின் உயிர் வாழும் உரிமை எந்த அளவிற்கு பாதுகாக்கப்பட வேண்டும், குழந்தையின் வளர்ச்சி என்பது ஓர் உரிமை என்பதும், குழந்தையின் பங்கேற்கும் உரிமையை மேலும் முன்னெடுத்துச் செல்ல வழிவகைகளை ஆராய்வது, பிரச்சினையான சூழலில் உள்ள மற்றும் பாதுகாக்கப்பட வேண்டிய குழந்தைகள் யார் எனத் தெரிந்துக் கொள்வதுடன் அதற்கான ஆயத்த செயல்களை மேற்கொள்வதற்கான வழிவகைகளை அறிந்து கொள்வது

பயிற்சி கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை சூழ்நிலைக்கு தகுந்தாற்போல் ஒலி, ஒளி சாதனங்களை பயன்படுத்துதல், வரைப்படங்களை பயன்படுத்துதல், திரையிட்டுக் காட்டி விளக்குதல் போன்ற பல முறைகளை கையாண்டு பயிற்சி அளிக்கலாம்.

## செயல்பாடு – 1



பயிற்றுநர் பங்கேற்பாளர்களிடம் ஏதேனும் மூன்று வார்த்தைகளை கூற வேண்டும். அதில் ஒரு வார்த்தை முக்கியமாக "குழந்தை" என்பதை பயிற்றுநர் சொல்ல வேண்டும். அந்த மூன்று வார்த்தைகள் சொன்ன உடன் அவர்கள் மனதில் தோன்றியதை ஒரு வார்த்தையில் தங்களிடம் உள்ள நோட்டு புத்தகத்தில் எழுதச் சொல்லவும். பயிற்றுநர் அதிக நேரம் அளிக்காமல் மூன்று கேள்விக்கும் சேர்த்து இரண்டு நிமிட அவகாசம் மட்டுமே அளிக்க வேண்டும். பின்னர் ஒவ்வொருவரும் எழுதியதை பயிற்சி அறையில் அனைவரும் அறியும் வண்ணம் கூற வேண்டும்.

இதில் குழந்தை என்று சொன்னவுடன் பல பதில்கள் வரும். மற்ற இரண்டு வார்த்தைகளுக்கும் அனைவரின் பதிலும் ஒன்றாகவே இருக்கும். இரண்டு அல்லது மூன்று பேரின் கருத்து மாறுபட்டு இருக்கும். ஆனால் குழந்தை என்ற சொல்லுக்கு வரும் பதில் பல வார்த்தைகளாக வரும் இதன் அடிப்படையில் பயிற்றுநர் குழந்தை என்பவர் எந்த அளவிற்கு குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் அவசியமானவர் என்பதை உணர முடியும். இதனை தொடர்ந்து குழந்தை என்பவர் எத்தனை வயது வரை உள்ளவர் என்பதை கேட்டு அதற்கான விளக்கத்தை அளிக்க வேண்டும்.

உதாரணம்: திருவிழா, குழந்தை, சந்தை போன்ற வார்த்தைகளை பயன்படுத்தலாம்

## செயல்பாடு – 2

அ. குழந்தைகளின் உரிமைகள் சம்பந்தப்பட்ட கொள்கைகள் பற்றி சிந்திக்க வைப்பதற்காக, பங்கேற்பாளர்களை இருவர் இருவராக பிரித்துக் கொள்ளலாம்.

ஆ. "விருப்பங்களும் தேவைகளும்" என்று தலைப்பிட்டுள்ள விளக்க வரைப்படங்களை ஒவ்வொரு குழுவிற்கும் கொடுத்து குழந்தைகளின் வளர்ச்சிக்கு அவசியமானது எது என்ற கேள்விக்கு விடை கூற வைக்க வேண்டும்.

*குறிப்பு:* 3 பக்கங்களில் 6 படங்களும், நான்காவது பக்கத்தில் இரு படங்களும் 4 காலி இடங்கள் இருக்கும். (பக்கம் 99-103)

இ. ஒவ்வொரு ஜோடியும் (பங்கேற்பாளர்கள்) கீழ்க்கண்ட இரண்டு விஷயங்களைச் செய்ய வேண்டும்.

- கொடுக்கப்பட்டுள்ள படங்களைப் பார்த்து, எந்தெந்தப் படம் குழந்தையின் தேவைகளைச் சித்தரிப்பது என தீர்மானிக்க வேண்டும்.
- அடுத்ததாக காலி இடங்கள் நான்கிலும் மேலே குறிப்பிட்டவற்றைத் தவிர மற்ற தேவைகளைச் சித்தரிக்கும் படங்களை இட்டு பூர்த்தி செய்ய வேண்டும்.

ஈ. குழந்தைகள் விரும்புவது மற்றும் அவர்களுக்குத் தேவைப்படுவது எல்லாவற்றையும் பொருளாதாரக் காரணங்களால், அரசாங்கத்தால் கொடுக்க இயலாது என்பதை விளக்க வேண்டும். அரசாங்கம் நிதி பற்றாக்குறையால் நிதி ஒதுக்கீட்டைக் குறைத்துவிட்டதாகக் கற்பனை செய்துகொண்டு இந்த அடிப்படையில், மிகவும் அவசியம் இல்லாத 8 பொருட்களை நீக்கிவிடுமாறு கேட்டுக் கொள்ள வேண்டும்.

உ. இறுதியாக, மீதி உள்ள பொருட்கள் என்ன என்பதை ஒவ்வொரு ஜோடியும் மற்றவர்களுக்குக் கூற வேண்டும். அவ்வாறு ஒவ்வொரு ஜோடியும் அறிவிக்கும்போது, யாராவது ஒருவர் அவற்றைப் பட்டியலிட வேண்டும். அப்போதுதான், எந்தெந்தப் பொருட்கள் அனைத்துக் குழுவினராலும் சொல்லப்பட்டன எவை இல்லை என்பதைப் பார்க்க முடியும்.

ஒவ்வொரு குழுவும் இப்போது, கீழ்க்கண்ட கேள்விகளுக்கு விடை அளிக்க வேண்டும்.

- எந்த அடிப்படையில் அவசியமான 8 பொருட்களைத் தேர்ந்தெடுத்தீர்கள்?
- எந்தெந்தப் பொருட்களை நீக்குவது எனத் தீர்மானிப்பது சிரமமாக இருந்ததா?
- “விருப்பம்” என்பதற்கும், “தேவை” என்பதற்கும் உள்ள வேறுபாடு என்ன?
- ஒரு குழந்தையின் வளர்ச்சிக்கு என்ன தேவை?

ஒரு குழந்தை விரும்புவது என்ன என்பதைவிட, அதன் தேவை என்ன என்று ஒருமித்த கருத்தை உருவாக்குவதே இந்தப் பயிற்சியின் நோக்கம். அதாவது, ஒரு குழந்தையின் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதது எது? இவ்வினாவிற்கு இறுதியாய் கிடைக்கும் பதிலை வரைப்படத்தாளில் வரைந்து, சுவரில் ஒட்டி வைத்துக் கொள்ள வேண்டும். இந்த பதில் நமக்கு பிறகு தேவைப்படும்.

பயிற்சியாளர்கள் விருப்பத்துக்கும் தேவைக்கும் உள்ள வேறுபாடு என்ன என்பதை தற்போது புரிந்து கொண்டிருப்பார்கள்.

“உரிமை” என்பது பற்றி, தற்போது விளக்கமளிப்பது பொருத்தமாக இருக்கும்.

மிக அடிப்படையான தேவைகளை, உரிமைகள் என்று கூறலாம். ஒருவரின் சட்டபூர்வமான உரிமைகளையும் உரிமை என வரையறுக்கலாம்.

## செயல்பாடு – 3

பங்கேற்பாளர்களை நான்கு குழுக்களாக பிரிக்க வேண்டும். ஒவ்வொரு குழுவிற்கும் நான்கு அடிப்படை உரிமைகளான வாழும் உரிமை, வளர்ச்சிக்கான உரிமை, பாதுகாப்பு உரிமை, பங்கேற்கும் உரிமை என தலைப்பு அளிக்க வேண்டும். கீழ்க்கண்ட செயல்பாடுகளில் ஏதாவது ஒன்றினை அல்லது உங்களுக்கு தெரிந்த செயல்பாட்டை கொடுக்க வேண்டும்.

அ. ஒவ்வொரு குழுவும் கொடுக்கப்பட்ட தலைப்பின் அடிப்படையில் உரிமை பற்றிய குழு விவாதம் செய்து பின்னர் அதனை தொகுத்து சமர்ப்பிக்க சொல்ல வேண்டும்.

அல்லது

ஆ. உரிமைகளின் அடிப்படையில் ஒரு மாதிரி நாடகம் நடித்து காண்பிக்க சொல்ல வேண்டும்.

பங்கேற்பாளர்கள் அளித்துள்ள விளக்கத்தின் அடிப்படையில் கேள்விகளை எழுப்பி உரிமைகள் பற்றி விளக்கம் அளிக்க வேண்டும்.

## செயல்பாடு – 4

### வாழும் உரிமை

1. குழந்தை இறப்பு விகிதம் / ஊட்டச்சத்தின்மை / ஊனமுற்ற குழந்தைகள் இறப்பு விகிதம் / சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த குழந்தைகள் நிலை ஆகியவை தேசிய அளவில் / மாநிலத்தில் / மாவட்டத்தில் / நகரத்தில் எவ்வாறு உள்ளது என்பதை வரைப்படமாகத் தயாரித்து வைப்பது உதவிகரமாக இருக்கும்.

2. சமுதாயத்தில் வாழும் உரிமை மறுக்கப்பட்ட குழந்தைகள் யாரேனும் இருக்கிறார்களா? (இருந்தால் யார், ஏன், என்ற கேள்வியை உதாரணத்துடன் எழுப்பலாம்).

3. ஏழ்மை மற்றும் நலிவுற்ற குழந்தைகள், இக்கட்டான சூழ்நிலையில் உள்ள குழந்தைகள் ஆகியோரை பங்கேற்பாளர்கள் பட்டியலிட வேண்டும்.

4. வாழும் உரிமைக்குத் தடையாய் இருப்பவை பற்றி விவாதிக்கலாம். விவாத இறுதியில் கருத்துக்களைத் தொகுத்து பட்டியலிடச் சொல்லலாம். உடன்படிக்கையில் வாழ்வதற்கான உரிமை பற்றிய குறிப்பான ஷரத்துக்களை பயன்படுத்தலாம்.

## வளர்ச்சிக்கான உரிமை:

1. பங்கேற்பாளர்களை சிறு குழுக்களாக பிரித்து கீழ்க்கண்ட கேள்விகளை கேட்கலாம்?

   அ. வளர்ச்சி என்றால் என்ன?

   ஆ. உங்கள் குழந்தைக்கு எப்படிப்பட்ட வளர்ச்சி தேவை என்று விரும்புகிறீர்கள்?

   இ. உங்கள் குழந்தை செய்யலாம் / செய்யக் கூடாது என நீங்கள் நினைப்பதில் சிலவற்றைப் பட்டியலிடவும்.

   குழுக்கள் அவர்கள் பதில்களை ஒப்பிட்டும் பார்க்கலாம்.

   ஒவ்வொரு குழுவும் தங்கள் பதிலை எந்த அடிப்படையில் தீர்மானித்தார்கள் என்று விளக்க வேண்டும்.

2. முக்கியமான உரிமைகளையும், அவை பற்றிய உடன்படிக்கை ஷரத்துக்களையும் ஒரு மரத்தின் கிளைகளாக சித்தரிக்கலாம்.

   பங்கேற்பாளர்களை சிறு சிறு குழுக்களாக பிரித்து தங்கள் பகுதி குழந்தைகளுக்கு தேவைப்படும் உரிமைகளை வைத்து வளர்ச்சி மரத்தை வரையலாம். அவரவர் வரைந்ததை விவாதித்து இறுதியாக நாடு / மாநிலம் / பிரதேசம் முழுமைக்குமான வளர்ச்சி மரத்தை வரையலாம்.

   அல்லது

   குழந்தை வளர்ச்சி உரிமை சம்பந்தமாக இங்கு வளர்ச்சி மரமாக உருவகப்படுத்தி இணைக்கபட்டுள்ளது. இதன் அடிப்படையில் பங்கேற்பாளர்களிடம் கேள்வி கேட்டு எது எல்லாம் குழந்தையின் வளர்ச்சிக்கு அவசியம் என்பதை உணர்த்தலாம். (பக்கம் 104)

## பாதுகாப்பு உரிமை

சாதாரண குழந்தை மற்றும் பாதிப்புக்குள்ளான குழந்தையின் ஒரு நாள் வாழ்வினை பட்டியலிடச் சொல்லவும். பின்னர் பாதிப்புக்குள்ளான குழந்தையின், என்னனென்ன உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன என்பதை சுட்டி காட்டி விளக்கம் அளிக்கலாம்.

அல்லது

பங்கேற்பாளர்களை குழுக்களாக பிரித்து கொடுக்கப்பட்டுள்ள உண்மைச் சம்பவத்தின் அடிப்படையில் விவாதம் அல்லது நடித்து காட்டச் சொல்லலாம்.

## செயல்பாடு – 5

சட்டங்கள், திட்டங்கள் மற்றும் கண்காணிப்பு பற்றிய பரிசீலனை

பங்கேற்பாளர்களை 5 பேர் கொண்ட குழுவாக பிரிக்க வேண்டும். ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு ஊதிய பலூனை கொடுக்கவேண்டும். ஒவ்வொரு குழுவும் ஊதிய பலூனை அவர்கள் குழுவில் உள்ள நபர்கள் கையால் மேல் நோக்கி தட்டிக்கொண்டிருக்க வேண்டும். பலூன் குழுவின் வட்டத்திலிருந்து வெளியில் செல்லாமல் பார்த்து தட்டிக்கொண்டே இருக்க வேண்டும்.

பயிற்றுநர் பலூனை குழந்தையாகவும், குழுவின் உறுப்பினர்களை ஒவ்வொரு பொறுப்பில் உள்ளவராகவும் கருத்தில் கொண்டு பங்கேற்பாளர்களிடம் கேள்விகள் கேட்கலாம்.

1. ஏன் பலூனை தவற விட்டீர்கள்?
2. மற்ற குழு ஏன் தவறி வந்த பலூனை பாதுகாக்கவில்லை?
3. இதுபோன்று பாதிப்புக்குள்ளான குழந்தை தங்களிடம் வந்தால் நீங்கள் என்ன செய்வீர்?

இது போன்ற பல கேள்விகளை பங்கேற்பாளர்களிடம் கேட்கலாம். இதன் அடிப்படையில் குழந்தை பாதுகாப்பில் ஒவ்வொருவரின் பொறுப்பும் எவ்வளவு முக்கியமானது என உணர்த்தலாம்.

## செயல்பாடு – 6

அ. பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்கள் இருந்தால், அமைப்பு ரீதியாக குழு அமைத்து அவர்கள் அமைப்புகளின் செயல்பாடுகளைப் பரிசீலிக்கலாம்.

அவரவர் திட்டத்தில் உள்ள குறைகளை கண்டு கொள்ளவும், சரி செய்து, எதிர்காலத்தில், குழந்தைகளின் பிரச்சனைக்கும், தேவைக்கும் ஏற்றாற்போல் நடவடிக்கைகளைத் திட்டமிடவும் இப்பயிற்சி உதவும்

ஆ. கீழ்க்கண்ட கேள்விகள் பரிசீலிக்கலாம். மேலும் பயிற்றுநர் பல கேள்விகளை கேட்டு அதன் அடிப்படையில் பரிசீலிக்கலாம்.

1. உடன்படிக்கைத் தொடர்பான நமது பணி பற்றி பட்டியலிடவும்
2. குழந்தை வளர்ச்சிக்கு நாம் செய்து கொண்டிருப்பது / செய்யாமல் இருப்பது என்ன?
3. நம்மால் என்ன செய்திருக்க முடியும்?
4. நமது பணியில் என்ன விதமான தடைகள் ஏற்படுகின்றன?

இ. ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒருவர், தம் குழு பூர்த்தி செய்துள்ள பட்டியல் பற்றி பிறருக்கு கூறலாம்.

ஈ. பயிற்சியாளர், இறுதியாக பட்டியல்களைத் தொகுத்துக் கூறி விடப்பட்ட விஷயங்களையும் எடுத்துக் கூறி முடிக்கலாம்.

## உண்மைச் சம்பவம்

### உண்மைச் சம்பவம் 1

சிவா, வயது 11 மற்றும் ரவி, வயது 13 இரு சிறுவர்கள். இவர்களின் சொந்த ஊர் திருநெல்வேலியில் ஒரு சிறு கிராமம் ஆகும். அவ்வூரில் உள்ள ஒரு தரகர் இவர்களின் குடும்ப வறுமையைக் காரணம் காட்டி இச்சிறுவர்களை வேலைக்கு அனுப்புமாறு பெற்றோரிடம் கூறினார். மற்றும் சிறுவர்களின் பெற்றோரிடம் முன் பணமாக தலா ரூபாய் 8000 தரகரால் கொடுக்கப்பட்டது. இச்சிறுவர்கள் இருவரையும் குஜராத் மாநிலத்தில் தாராநகரில் ஒரு அப்பள கம்பெனியில் பணிபுரிவதற்கு அனுப்பி வைத்தார். அக்கம்பெனியில் இரண்டு வருட காலமாக இச்சிறுவர்கள் வேலை செய்து வந்தனர். இவர்கள் நாய்கள் கட்டிப்போடும் வராண்டாவில் தங்கவைக்கப்பட்டார்கள். இவர்களின் வேலை நேரம் காலை 5 மணி முதல் இரவு 12 மணி வரை ஆகும். இச்சிறுவர்கள் வேலை சரியாக செய்யவில்லை என்றால் இவர்களை அடித்து துன்புறுத்துவதுடன் நெருப்பால் சூடு போடுவது வழக்கமாகிவிட்டது அப்பள கம்பெனி முதலாளிக்கு. இத்துன்புறுத்தலால் சிறுவர்கள் தப்பிப்பதற்கான வாய்ப்பை எதிர்பார்த்திருந்தனர். ஒரு நாள் முதலாளி வெளியே சென்றிருந்த பொழுது இச்சிறுவர்கள் இருவரும் அப்பளக் கட்டை எடுத்துவந்து ஒரு கடையில் விற்று அதில் வந்த பணத்தை எடுத்துக்கொண்டு அந்த ஊரிலிருந்து இரயில் ஏறி தப்பித்து வந்தனர்.



**உங்களுக்கான கேள்வி**

இது போன்ற சம்பவம் உங்கள் ஊரில் நடக்கின்றதா?
தப்பித்த சிறுவர்கள் உங்களிடம் வந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?
இதுபோல் சம்பவம் உங்களுக்கு தெரியவந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?
இந்த கதையில் சிறுவர்களுக்கு பறிப்போகும் உரிமைகள் என்னென்ன?

### உண்மைச் சம்பவம் 2

சிறுமி காயத்ரி, வயது 15, தனது பெற்றோருடன் சென்னையில் வசித்து வருகிறார். கல்வி பயிலும் இச்சிறுமி சில நாள் கழித்து பள்ளிக்கு சென்றுள்ளார். பள்ளியில் ஆசிரியர் ஏன் பள்ளிக்கு வரவில்லை, ஏன் உன்னுடைய முகம் வாடி உள்ளது, மற்றும் உன்னுடைய உதடுகள் ஏன் வெட்டுப்பட்டுள்ளது என்றும் கேட்டார். இதற்கு சிறுமி எந்தவித பதிலும் அளிக்காமல் அமைதியாக இருந்தாள். சிறிது நேரம் கழித்து ஆசிரியரிடம் சிறுமி பேசினாள்.

தன் தாயார் ஒரு நாள் வேலூருக்கு அழைத்துச் சென்று அங்கு திருமண மாளிகை உரிமையாளர் சேகர் என்பவருடன் உடலுறவு கொள்ளுமாறு வற்புறுத்தி, ஆடைகளை களைந்து திருமண மாளிகையில் உள்ள ஒரு அறைக்குள் தள்ளிவிட்டார். இதை மறுத்த என்னை அடித்து துன்புறுத்தினார். இதனால் என் தாயின் செயலுக்கு கட்டுப்பட்டேன். இதன் தொடர்ச்சியாக மூன்று முறை நான் பாலியல் செயலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளேன். நான்காவது முறை கடுமையான பாலியல் செயலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளேன் என்று ஆசிரியரிடம் சிறுமி கூறினாள்.



**உங்களுக்கான கேள்வி**

காயத்ரியை சந்திக்க நேர்ந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?
இத்தகவலை முதலில் யாரிடம் தெரிவிப்பீர்கள்?
குழந்தையின் மறுவாழ்விற்கு நீங்கள் மேற்கொள்ளும் செயல்கள் என்ன?
இந்த வன்கொடுமை எந்த சட்டத்தின் கீழ் முறையாக கையாளப்படும்?
சட்ட ரீதியாக எதுபோன்ற செயல்களை சந்தீப்பீர்கள்?

## உண்மைச் சம்பவம் 3

சேகர், 13 வயது சிறுவன், 7ம் வகுப்பு படிக்கிறான். இவனது தந்தை ஒரு கூலி தொழிலாளி. தாய் வீட்டு வேலை செய்பவர். தந்தை பக்கத்து வீட்டுக்காரர் பணத்தை திருடியதால் அவரை சிறையில் அடைக்கப்பட்டது. இதன் காரணமாக சேகரை ஒரு குழந்தைகள் இல்லத்தில் சேர்த்து விடுகிறாள். மூன்று மாதங்கள் முடிந்தன. ஒரு நாள் இல்லக் காப்பாளரின் பணம் காணாமல் போய்விட்டது. இது நாள் வரை இக்காப்பகத்தில் இப்படி ஒரு செயல் நடக்கவில்லை. இப்பொழுதுதான் நடந்துள்ளது. புதிதாக வந்த சேகர் இந்த வேலை செய்தான் என்று சிறுவனை வாய்க்கு வந்தபடி திட்டி பணத்தை திருப்பி கொடுக்குமாறு கேட்டார். ஆனால் சேகர் நான் அந்த செயலை செய்யவில்லை என்று கூறினான். உன் அப்பா பணத்தை திருடியவர் அதுபோல் நீயும் செய்யமாட்டாய் என எப்படி நம்புவது என்று அவனுக்கு உணவு தராமல் திட்டிக்கொண்டேயிருந்தார். அன்று இரவு முழுதும் சேகர் தூங்கவில்லை. காலையில் விடிவதற்குள் காப்பகத்திலிருந்து தப்பி ஓடி விட்டான்.



### உங்களுக்கான கேள்வி

சேகர் செய்தது சரியா / தவறா?
சேகர் என்ன கொடுமைக்கு ஆளாகினான்?
இவற்றில் இல்லக் காப்பளார் என்ன செய்திருக்க வேண்டும்.
இது போன்ற நிகழ்வில் உங்களின் பங்கு என்ன?

## உண்மைச் சம்பவம் 4

கலா வயது 30, இவர் ஒரு எச்.ஐ.வி / எய்ட்ஸால் தாக்கப்பட்ட ஒரு நோயாளி. இவர் சில வருடங்களாக இந்நோயால் பாதிப்படைந்துள்ளார். கலாவிற்கு மோகன் என்ற 6 வயது ஆண் குழந்தை உள்ளது. பள்ளிக்கு செல்லவில்லை. இவரது கணவர் ஒரு லாரி ஓட்டுநர். இவர் பல பெண்களுடன் தொடர்பு கொண்டதால் அவரிடமிருந்து இந்நோய் கலாவிற்கு வந்துள்ளது. இந்த நோய் குழந்தைக்கு உள்ளதா என்பதை அறிந்துகொள்ள இரத்த பரிசோதனை செய்தனர். ஆனால் குழந்தைக்கு இந்நோய் இல்லை என்று இரத்த பரிசோதனை அறிக்கை தெரிவித்துள்ளது. சில மாதங்கள் கழித்து தாய் இறந்துவிட்டாள்.



### உங்களுக்கான கேள்வி

உங்கள் ஊரில் இதுபோன்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளதா?
குழந்தை மோகன் உங்களிடம் வந்தால் நீங்கள் எப்படி நடந்துகொள்வீர்கள்?
குழந்தை மோகனை பள்ளியில் சேர்ப்பீரா?
மோகனின் மறுவாழ்விற்கு நீங்கள் என்ன என்ன செயல்கள் மேற்கொள்வீர்கள்?

## உண்மைச் சம்பவம் 5

என் பெயர் மாலதி, வயது 18. நான் கிருஷ்ணகிரியில் ஒரு கிராமத்தில் பெற்றோருடன் வசித்து வருகின்றேன். எனது தாய் தற்பொழுது என்னுடன் இல்லை. எனது தந்தை இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். எனக்கு இரண்டு சகோதரிகளும், ஒரு சகோதரனும் இருக்கின்றனர். எனது பெற்றோர் விவசாயத் தொழில் செய்து வருகின்றனர்.

நான் 6ம் வகுப்பு படிக்கும்பொழுது எனது பெற்றோர் என்னை கல்வி இடைநிறுத்தம் செய்து எனக்கு திருமணம் செய்துவைக்க வற்புறுத்தினர். பின்னர் திருமணத்திற்கான ஏற்பாடுகளை பெற்றோரே முன்னின்று செய்தனர். எனக்கும் சரவணன் என்பவருக்கும் நிச்சயம் செய்தனர். சரவணன் ஒரு தையல் தொழிலாளியாக பணிபுரிந்து வருகிறார். இவர் இரண்டு வருடங்களுக்கு முன்பே திருமணமானவர். இவரது மனைவி உடல் நலக் குறைவினால் இறந்துவிட்டார். எனது பெற்றோர் என்னை சரவணனுக்கு இரண்டாவது மனைவியாக திருமணம் செய்து கொள்ள கட்டாயப்படுத்தினர். ஆனால் எனக்கு இதில் சிறிதளவும் உடன்பாடில்லை. நான் படிக்க வேண்டும் என்று என்னால் முடிந்த அளவு சொன்னேன். ஆனாலும் எனது பெற்றோர் எனக்கு திருமணத்தை நடத்துவதற்கான தேதியை முடிவு செய்து அதற்கான வேலைகளையும் தொடங்கிவிட்டனர்.



**உங்களுக்கான கேள்வி**

இந்த சம்பவத்தை மாலதி உங்களிடம் சொன்னவுடன் நீங்கள் முதலில் என்ன செய்வீர்?
திருமணத்தை எவ்வாறு தடுத்து நிறுத்துவீர்?
யாரிடம் புகார் அளிப்பீர்?
இதில் யார் யாருக்கெல்லாம் தண்டனை உள்ளது?

# மாவட்ட அளவில் குழந்தைகளுக்கான பாதுகாப்பு வளையம்




கருத்தாக்கம் : மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம், சமூக பாதுகாப்புத் துறை, தமிழக அரசு.



சத்தான உணவு



சுத்தமான குடிநீர்



மிதிவண்டி



நமது கருத்தைச் சொல்வதற்கும், அதைப் பிறர் கேட்பதற்குமான உரிமை




தொலைக்காட்சிப் பெட்டி



தேவைப்படும் போது மருத்துவ வசதி



தமக்கென்று தனி படுக்கை



ஐஸ் கிரீம்



பாரபட்சமாய் நடத்தப்படுவதிலிருந்து பாதுகாப்பு



கல்வி



போதுமான அளவு செலவழிக்கப் பணம்



சுற்றுலா



குடியிருக்க இடம்



அவரவர் மதம் சொல்வது
போல் நடக்க வாய்ப்பு



கம்ப்யூட்டர்



நவீன உடைகள்



தூய்மையான காற்று



கொடுமைப்படுத்துதல் மற்றும்
புறக்கணிப்பிலிருந்து பாதுகாப்பு



வானொலி



விளையாட்டு மற்றும் பொழுது போக்கு மையங்கள்



வளர்ச்சி
குழந்தைகள்